Registered as a Newspaper

# உதயன்

பக்கங்கள் 12

விலை ரூ. 50

சுடர் : 38
கதிர் : 293

வெள்ளிக்கிழமை 15 செப்ரெம்பர் 2023

ஆவணி 29 ஆம் நாள் – வள்ளுவர் ஆண்டு 2054

## சுற்றுலா நாடாக இலங்கைத் தீவு!

கொழும்பு, செப். 15
சுற்றுலா செல்வதற்கு உலகின் சிறந்த நாடுகளில் ஒன்றாக இலங்கையும் பெயரிடப்பட்டுள்ளது.
சுற்றுலா இணையத்தளமான 'பிக் செவன் ட்ரவல்' என்ற இணையத்தளம் வெளியிட்டுள்ள பட்டி »11

### சர்வதேசப் பொறிமுறைகளால்

# போர்க்குற்றவாளிகளை பொறுப்புக்கூறச் செய்க

### இலங்கையின் விவகாரத்தில் பேர்ள் அமைப்பு வலியுறுத்து

கொழும்பு, செப்ரெம்பர் 15
இலங்கையின் போர்க்குற்றவாளிகளைப் பொறுப்புக்கூறச் செய்வதற்கு சர்வதேசப் பொறிமுறைகளை சர்வதேச சமூகம் பயன்படுத்தவேண்டும் என்று பேர்ள் அமைப்பு வலியுறுத்தியுள்ளது. ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் 54ஆவது அமர்வில், இலங்கை தொடர்பில் நேற்று இடம்பெற்ற கலந்துரையாடல்களிலேயே பேர்ள் அமைப்பு இவ்வாறு வலியுறுத்தியுள்ளது. »11

## நாணய நிதியத்தின் மீளாய்வு ஆரம்பம்!

கொழும்பு, செப். 15
சர்வதேச நாணய நிதியத்துடன் இணக்கம் காணப்பட்ட புதிய பொருளாதார மறுசீரமைப்புகளில் இதுவரை அமுல்படுத்தப்பட்டுள்ள விடயங்கள் தொடர்பான முதலாவது முன்னேற்ற மீளாய்வுக் கலந்துரையாடல் நேற்றுக்காலை »11

## தியாகதீபம் திலீபனின் நினைவேந்தல் ஆரம்பம்!



யாழ்ப்பாணம், செப். 15
இந்தியாவிடம் ஐந்து அம்சக் கோரிக்கைகளை முன்வைத்து, தன்னுயிரையே ஆகுதியாக்கிய தியாகதீபம் திலீபனின் 36ஆவது ஆண்டு நினைவேந்தல் நிகழ்வுகள் இன்று ஆரம்பமாகின்றன.
1987ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 15ஆம் திகதி இந்தியா »11

## கட்டுப்படுத்தப்படுகிறது நீதிமன்றின் சுயாதீனம்

*சட்டத்தரணிகள் கூட்டிணைவு அதிருப்தி*

கொழும்பு, செப். 15
நீதிபதிகளால் அவர்களுக்காகப் பேசமுடியாது என்பதை நன்கு அறிந்துகொண்டு, நாடாளுமன்ற சிறப்புரிமை என்ற போர்வையின்கீழ் நீதிபதிகள் மற்றும் நீதிமன்ற செயற்பாடுகள் தொடர்பில் நாடாளுமன்ற உறுப்பினர்கள் கருத்துகளை வெளியிடும் போக்கு நீதிமன்ற சுயாதீனத்துவத்தை அவமதிக்கும் செயலாகும் என்று சட்டத்தரணிகள் கூட்டிணைவு அதிருப்தி வெளியிட்டுள்ளது. »11

## கனடா செல்ல ஆசைகாட்டி 10 லட்சம் ரூபா மோசடி!

### பொலிஸாரால் ஒருவர் கைது

யாழ்ப்பாணம், செப். 15
கனடா அனுப்புவதாகத் தெரிவித்து 10 இலட்சம் ரூபாவை மோசடி செய்த நபரொருவர் யாழ்ப்பாணம் மாவட்ட விசேட குற்றவிசாரணைப் பிரிவு பொறுப்பதிகாரி குணறோயன் »11

## பேர்த்தியைக் கொன்ற பாட்டி விளக்கமறியலில்

யாழ்ப்பாணம், செப். 15
திருநெல்வேலிப் பகுதியிலுள்ள தனியார் விடுதியின் அறையில் இருந்து சடலமாக மீட்கப்பட்ட 12 வயதுச் சிறுமியை (பேர்த்தியை) கொலைசெய்த குற்றச்சாட்டில் அந்தச் சிறுமியின் பாட்டி விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார். »11



### கசிப்புக் கும்பலை

## காட்டுக்குள் விரட்டிச் சென்ற பொலிஸ் அலுவலர் மாயம்!

*கிளிநொச்சியில் சம்பவம்*
*தேடும் பணிகள் தீவிரம்*

கிளிநொச்சி, செப். 15
கிளிநொச்சி - புதுஜயன்குளப் பகுதியில் கசிப்புக் காய்ச்சும் குற்றவாளிகளைப் பிடிக்கச்சென்ற பொலிஸ் அலுவலரைக் காணவில்லை.
இதையடுத்து அவரைத் தேடும் நட »11

## நல்லூரில் நேற்று கொடியிறக்கம்



யாழ்ப்பாணம், செப். 15
வரலாற்றுச் சிறப்புமிக்க நல்லூர்க் கந்தசுவாமி ஆலய வருடாந்த மஹோற்சவப் பெருந் திருவிழாவின் கொடியிறக்க விழா (துவஜா அவரோகணம்) நேற்று வியாழக்கிழமை மாலை நடைபெற்றது. நேற்று மாலை 4.45 மணியளவில் வசந்த மண்டபப் பூசை »11

### நாயன்மார்கட்டு வாள்வெட்டு

## பிடியாணை பிறப்பிக்கப்பட்டவருடன் உடன் இருந்த பொலிஸ் அதிகாரி

*தீவிர விசாரணையை முன்னெடுக்க முடிவு*

யாழ்ப்பாணம், செப். 15
யாழ்ப்பாணம் நாயன்மார்கட்டுப் பகுதியில் அண்மையில் இடம்பெற்ற வாள் வெட்டுத் தாக்குதலில், நபரொருவர் »11



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# புத்தவிகாரைகளை அமைப்பது புதைகுழிகளை மறைக்கவே!

## செல்வம் எம்.பி. சந்தேகம்

**கொழும்பு, செப்.15**

**புத்த விகாரைகள் அமைக்கப்படுவதும், இராணுவம் நிலங்களை கையகப்படுத்துவதும் மனித உடல் எச்சங்களை மறைப்பதற்காகவே என்ற சந்தேகம் ஏற்பட்டுள்ளது என்று ரெலோ அமைப்பின் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்துள்ளார்.**

வவுனியாவில் நேற்று இடம்பெற்ற நிகழ்வு ஒன்றில் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

மனித உரிமை மீறல் தொடர்பாக சர்வதேச விசாரணை தேவை என தென்னிலங்கைத் தலைவர்கள் கோருகின்றனர்.

கொக்குத்தொடுவாயில் மனிதப் புதைகுழிகள் கண்டு பிடிக்கப்பட்டு அதில் பெண் போராளிகளது எலும்பு எச்சங்கள் உள்ளன என்று கூறப்படுகின்றது. இதற்கும் சர்வதேச விசாரணை வேண்டும் என தென்னிலங்கைத் தலைவர்கள் குரல் கொடுக்கவேண்டும்.

இதற்கு அவர்கள் மௌனம் சாதிக்க முடியாது.

மன்னாரில் கண்டு பிடிக்கப்பட்ட மனிதப் புதைகுழி விவகாரம் கிடப்பிலே உள்ளது. இப்படி ஒவ்வொரு இடத்திலும் மனித எலுப்பு எச்சங்களைக் கண்டு பிடித்து கிடப்பில் போடும் நிலையே காணப்படுகிறது.

இந்த விடயத்தில் சர்வதேசம் சரியான கவனத்தை எடுக்க வேண்டும்.

ஒட்டுமொத்த சிங்களத் தலைவர்களும் குரல் கொடுக்க வேண்டும். சர்வதேச விசாரணையை தமிழ் மக்கள் கோருகின்றார்கள். மனிதவுரிமை மீறல்களில் ஈடுபட்டவர்கள் தண்டிக்கப்படும் வகையில் தென்னிலங்கையில் உள்ளவர்களும் மனச்சாட்சிப்படி நடக்கவேண்டும் - என்றார். (எ-18)

# வடக்கில் விகாரைகளுக்கு தமிழரால் ஆபத்தாம்!

## புரளியைக் கிளப்பும் சாந்தபோதி தேரர்

கொழும்பு, செப்.15

வடக்கிலுள்ள 68 பௌத்த விகாரைகளுக்கு தமிழ் அரசியல்வாதிகளால் அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளது என்று குருந்தூர்மலை விகாராதிபதி கல்கமுவே சாந்தபோதி தேரர் தெரிவித்துள்ளார்.

வடக்கிலுள்ள 68 பௌத்த விகாரைகளை இவர்கள் இந்துக்களின் வணக்கஸ்தலங்கள் எனப் பொய்யாக உரிமை கோருகின்றனர். தொல்லியல் திணைக்களம், பொலிஸ், இராணுவம் என்பனவும் இந்த இடங்களில் உதவிக்கு வருவதில்லை. அவர்கள் மக்கள் மத்தியில் பதற்றத்தை ஏற்படுத்தக்கூடாது என கூறி பின்வாங்குகின்றனர்.

இதற்குப் பின்னால் அரசியல் உள்ளது.

இராணுவத்தினரும், பொலிஸாரும் பார்த்துக் கொண்டிருக்கும்போதே புத்த விகாரையை இடித்து விட்டு அதன் மேல் சிவலிங்கத்தை கட்டுகிறார்கள். நான் பௌத்தத்தை பாதுகாக்க திடசங்கற்பம் பூண்டுள்ளேன் - என்றார். (எ-6)



# கிளி.யில் வீதிக் காணியை கையளித்த இராணுவம்

கிளிநொச்சி, செப்.15

போரின் பின்னர் இராணுவத்தினரின் பயன்பாட்டில் இருந்து வந்த கிளிநொச்சி மத்திய கல்லூரிக்குச் செல்லும் வீதிக்கான காணி பாடசாலையின் பயன்பாட்டுக்காக இராணுவத்தினரால் விடுவிக்கப்பட்டுள்ளது. இந்தக் காணி கையளிப்பு நிகழ்வு நேற்று வியாழக்கிழமை இடம்பெற்றது.

நிகழ்வில் யாழ்ப்பாண இராணுவ கட்டளை அதிகாரி மேஜர் ஜெனரல் சுஜீவ கெட்டியாராச்சி பங்கேற்று காணி ஆவணத்தை கிளிநொச்சி மாவட்டச் செயலரிடம் கையளித்தார்.

கிளிநொச்சி மாவட்டச் செயலர் றூபவதி கேதீஸ்வரன், கரைச்சி பிரதேச செயலாளர் பி.ஜெயகரன், இராணுவ உயர் அதிகாரிகள், ஆசிரியர்கள், மாணவர்கள் எனப் பலரும் நிகழ்வில் கலந்துகொண்டனர்.

கிளிநொச்சி டிப்போ சந்திக்கருகே இரத்தினபுரம் வீதி பக்கமாக போர் வெற்றி நினைவுத் தூபிக்கு பின்பகுதியில் அமைந்துள்ள காணியே கையளிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ச-113)

# ஆலயத்தில் பணிபுரிந்தோர் மீது வன்முறைக் கும்பல் தாக்குதல்!

கிளிநொச்சி, செப். 15

ஆலயம் ஒன்றில் அலங்காரப் பணியில் ஈடுபட்டிருந்த இளைஞர்கள் மீது வன்முறைக்கும்பல் ஒன்று தாக்குதல் நடத்தியதில் காயமடைந்த நிலையில் அவர்கள் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

இந்தச் சம்பவம் கிளிநொச்சி ஊற்றுப்புலம் கிராமத்தில் அமைந்துள்ள ஆதி விநாயகர் ஆலயத்தில் நேற்றுமுன்தினம் நடந்துள்ளது.

திருவிழாவை முன்னிட்டு அலங்காரப் பணிகளில் ஈடுபட்டிருந்த இளைஞர்கள் மீதே அதே கிராமத்தைச் சேர்ந்த வன்முறைக் கும்பலொன்று தாக்குதல் நடத்திய தாகத் தெரிவிக்கப்படுகிறது.

தாக்குதலில் 4 இளைஞர்கள் காயமடைந்த நிலையில் அம்புலன்ஸ் வரவழைக்கப்பட்டு கிளிநொச்சி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டனர்.

சம்பவம் தொடர்பில் கிளிநொச்சி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டது.

பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (ச-214)

# 2023 உயர்தரப் பரீட்சைக்கான நேர அட்டவணை வெளியானது

கொழும்பு, செப். 15

இந்த வருடம் நடைபெறவுள்ள க.பொ.த உயர்தரப் பரீட்சைக்கான நேர அட்டவணையை பரீட்சைகள் திணைக்களம் நேற்று வியாழக்கிழமை வெளியிட்டுள்ளது.

அதன்படி 2023 ஆம் ஆண்டுக்கான க.பொ.த உயர்தரப் பரீட்சை எதிர்வரும் நவம்பர் 27ஆம் திகதி முதல் டிசம்பர் 21ஆம் திகதி வரை நடைபெறவுள்ளது.

முன்னதாக உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களுக்கு ஆறு பாடசாலைத் தவணைகள் ஒதுக்கப்பட்டன.

இந்த வருடம் பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்கள் 343 நாட்களில் ஏழு பாடசாலைத் தவணைகளை கடந்து செல்லும் வாய்ப்பு கிடைத்துள்ளதாகவும் பரீட்சைகள் திணைக்களம் சுட்டிக்காட்டியுள்ளது. (ஒ-ரி2)



# பாடசாலையருகே மதுபானசாலை!

## அகற்றுமாறு மக்கள் எதிர்ப்பு

யாழ்ப்பாணம், செப். 15

உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரிக்கு அருகில் உடுப்பிட்டிச் சந்தியில் மதுபானசாலையொன்றை அமைப்பதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளமைக்கு எதிர்ப்புத் தெரிவித்து அந்தப் பகுதி மக்கள் மற்றும் சமூக மட்ட அமைப்புகள் நேற்று வியாழக்கிழமை எதிர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் தெரிவிக்கையில்,

உடுப்பிட்டிச் சந்தியில் மதுபானசாலை அமைப்பதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. அனுமதி வழங்கப்பட்டிருக்கும் இடத்துக்கு மிக அருகில் பாடசாலைகள், கோயில், பொதுச்சந்தை என்பன உள்ளன. சனநடமாட்டம் அதிகமுள்ள இந்தப் பகுதியில் மதுபானசாலை அமைப்பது ஏற்புடையதல்ல. பலரும் அசௌகரியங்களுக்கு முகம் கொடுக்க நேரிடும். இது மாணவர்களை சீரழிப்பதுடன் அவர்களின் கல்வி வளர்ச்சிக்கும் பாதகமாக அமையும். குறித்த அனுமதியை இரத்துச் செய்ய உரிய தரப்பினர் நடவடிக்கை எடுக்கவேண்டும் - என்றனர். (ச-100)

## 'அஸ்வெசும' பயனாளிகளை

# தொழில்களில் ஈடுபடுத்த 'சமுர்த்தி பிளஸ்'

கொழும்பு, செப்.15

3 வருடங்களுக்குள் 'அஸ்வெசும' கொடுப்பனவை நிறுத்தி 'சமுர்த்தி பிளஸ்' வேலைத்திட்டம் ஒன்றை ஆரம்பித்து பயனாளிகளை பல்வேறு தொழில்களில் ஈடுபடுத்துவதற்கு அரசாங்கம் எதிர்பார்த்துள்ளது. இந்த விடயத்தை பெண்கள், சிறுவர் விவகாரங்கள் மற்றும் சமூக வலுவூட்டல் பதில் அமைச்சர் அனுப பெஸ்குவல் தெரிவித்தார்.

அவர் மேலும் குறிப்பிட்டதாவது:-

'அஸ்வெசும' திட்டத்தில் பயனடைவோரை வலுப்படுத்துவதற்கு ஜனாதிபதி ரணில் விக்கிரம சிங்கவின் ஆலோசனைக்கமைய புதிய திட்டமொன்று தயாரிக்கப்படவுள்ளது. அதற்கமைய 'சமுர்த்தி பிளஸ்' வேலைத்திட்டத்தை ஆரம்பித்து அவர்களை பல்வேறு தொழில்களில் ஈடுபடுத்துவதற்கு எதிர்பார்க்கப்பட்டுள்ளது.

இந்த விடயம் தொடர்பில் சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் மற்றும் சமுர்த்தி முகாமையாளர்களின் ஆலோசனைகளைப் பெற்றுக்கொள்ளும் செயற்பாடு தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இதேவேளை 'அஸ்வெசும' நலன்புரித் திட்டத்தின் ஓகஸ்ட் மாதக் கொடுப்பனவுகள் தற்போது வழங்கப்பட்டு வருகின்றன - என்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




குதிரையள் எல்லாம் ஓடின பிறகு லயத்தை மூடி ஒரு பிரியோசனமும் இல்லையே. குதிரையள் ஓடினாக் கூட பரவாயில்லை, சாப்பாட்டுக்கோ, தண்ணிக்கோ எப்பிடியோ லயத்துக்கு அதுகள் திரும்பி வரத்தான் வேணும். ஆனால் கள்ளர் ஓடினால் திரும்பி வரமாட்டாங்கள் தானே. அது சில பெரியவைக்கு விளங்குதில்லை.

நல்லூரில சப்பறத்தில இருந்து தீர்த்தம் மட்டும் எள்ளைப் போட்டால் கூட கீழ விழாதளவுக்கு கடும் சனக்கூட்டம். இந்தச் சனக்கூட்டத்துக்குள்ள பக்தரோட பக்தராமாறி நகையளை அறுக்கிறதுக்கெண்டும் ஒரு கும்பல் வாறது. இப்பிடி வாற கள்ளர் விரதகாரர் மாதிரி, பூங்காவனம் முடியுமட்டும் ஆற அமர கோயிலில இருக்கப் போறேலை. "கையில சங்கிலி, பையோட பஸ்" எண்டு நகையை அறுத்தவுடனேயே நைசா அங்கையிருந்து நழுவி, பஸ்ஸில ஏறி எங்க போகவேணுமோ அங்க போடுவினம். அப்பிடித் தப்பியோடினவையை பிறகு கண்டுபிடிக்கிறதெண்டது , கனகராயன் காட்டுக்குள்ள கருவேப்பிலை தேடுறமாதிரி கடும் கஷ்டம் கண்டியளோ.

இந்த முறை நல்லூரில எந்தளவு சனம் கூடவோ அந்தளவுக்கு நகைக் களவும் கூட. 30 பவுனுக்கு மேல களவு போயிருக்கெண்டு கதை. ஆனால் பதினொருபேர்தான் இதுவரைக்கும் முறைப்பாடு போட்டிருக்கினம். அந்தப் பதினொரு களவையும் கண்டுபிடிக்க பொலிஸ்காரர் , நல்லூர்க் கோயில் காரரிட்டப் போய் 'கோயில்ல உள்ள சி.சி.ரி.வி. கமெரா காட்சியளைப் பாக்கவேணும். அப்பதான் கள்ளர் ஆரெண்டு கண்டுபிடிக்கலாம்' எண்டு கேட்டிருக்கினம். அதுக்கு எங்களுக்குகெல்லாம் நேரமில்லை. திருவிழா முடிஞ்ச பிறகு வாங்கோ, பிறகு பாக்கலாம் எண்டு சொல்லி கோயில்காரர் திருப்பி அனுப்பிட்டினமாம்.

கோயில்ல கமெரா பூட்டுறது இப்பிடியான களவுகளைக் கண்டுபிடிக்கிறதுக்குத்தான். அதோட நல்லூரில களவெடுத்தாலும் கமெராவை வைச்சுக் கண்டுபிடிச்சிடுவாங்கள் எண்ட பயம் இருந்தால், களவில இறங்கிறவங்களுக்கும் பயம் வந்து களவெடுக்காமலே போடுவாங்கள். சனங்களும் 'நல்லூருக்குப் போனால் கள்ளர் நகையை அறுத்திடுவாங்களோ எண்ட பயமில்லாமல் முருகனைக் கும்பிடலாம்' எண்டு கோயிலுக்கு நம்பிக்கையோட வருவினம். அப்ப கோயில்காரர் கமெராவில கள்ளர் பிடிபட்டிருந்தால் அதை உடன பொலிஸ்காரருக்கு காட்டினால் தான், கோயிலை விட்டு கள்ளர் மாறமுதல் ஆக்களை அப்பலாம். அதைவிட்டிட்டு. திருவிழா முடிஞ்சபிறகு சிசிரிவி காட்சியளைக் குடுத்தால் கள்ளர் ஆர் எண்டு கண்டுபிடிச்சாலும், அவங்களைக் கையில பிடிக்கேலாமல் போடுமே.

திருவிழா நடக்கேக்க , கனக்க வேலையள் இருக்கும் தான். அந்த நேரத்தில கோயில்காரர் சிசிரிவியை பொலிஸ்காரருக்கு காட்டிக் கொண்டிருக்கிறதும் சிக்கல்தான் . ஆனால் சிசிரிவிக்குப் பொறுப்பான ஒராளிட்டச் சொல்லி, அதைக் காட்டச் சொன்னால், கள்ளனையும் பிடிக்கலாம், கோயில் வேலையிலையும் சிக்கல் வராது. கந்தனே கமெராவைக் காட்டமாட்டன் எண்டால், களவு குடுத்த சனங்கள் இனி எந்தக் கடவுளிட்டப்போய் 'நகையை மீட்டுக் குடு' எண்டு மண்டாடுறது?



- பட்சி

padsi@uthayan.com

## எரிவாயுவுக்கு மீண்டும் தட்டுப்பாடு

கொழும்பு, செப். 15

நாட்டில் கடந்த சில தினங்களாக கொழும்பு மற்றும் அதனை அண்மித்த பிரதான நகரங்களில் எரிவாயு சிலிண்டர்களுக்கு மீண்டும் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதாக பாவனையாளர்கள் தெரிவித்துள்ளனர்.

எரிவாயு விற்பனையாளர்களிடம் தொடர்பு கொண்டு கேட்டபோது நிறுவனத்திடமிருந்து எரிவாயு சிலிண்டர்கள் விநியோகம் சில தினங்களாக மேற்கொள்ளப்படவில்லை எனவும் இதனால் இந்த நிலை ஏற்பட்டுள்ளதாகவும் குறிப்பிட்டனர். (ஓ-ரி2)


## மீன்பிடியில் தகராறு; இருவர் சிகிச்சையில்

முல்லைத்தீவு, செப்.15

வவுனியா, கனகராயன்குளத்தில் உள்ள கரப்புக்குத்தி குளத்தில் மீன்பிடி தொடர்பாக இராணுவத்தினருடன் ஏற்பட்ட கைகலப்பில் இருவர் காயமடைந்து மாங்குளம் பிரதேச மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர் என்று தெரிவிக்கப்படுகின்றது.

கரப்புக்குத்தி குளத்தில் மீன்பிடியில் ஈடுபடுவதற்கான குத்தகை விலைமனுக்கோரல் மூலம் கிராமத்தைச் சேர்ந்த ஒருவரால் எடுக்கப்பட்டுள்ளது. இந்தநிலையில் குளத்தில் அனுமதியின்றி கரப்புக்குத்தி இராணுவத்தினர் மீன்பிடித்து வந்தனர் என்று கூறப்படுகின்றது. இந்தநிலையில் கடந்த செவ்வாய்க்கிழமை இரவும் இராணுவத்தினர் மீன்பிடித்தபோது, குளத்தைக் குத்தகைக்கு எடுத்தவரும் இன்னொருவரும் சென்று மீன் பிடிக்க வேண்டாம் என்று தடுத்துள்ளனர். அந்தச் சந்தர்ப்பத்தில் இராணுவத்தினர் அவர்கள் மீது தாக்குதல் நடத்தினர் என்று தெரிவிக்கப்படுகின்றது.

இந்தச் சம்பவத்தில் பொதுமகன் ஒருவனும், சிப்பாய் ஒருவரும் காயமடைந்து மாங்குளம் பிரதேச மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர். (எ-19)



## நல்லூரான் சிறப்பம்சம்

### அழகன் முருகன்

அழகான மயில்மீதில் அழகனவன் தினந்தோறும்
முழவதிர எழுந்தானே முருகனவன் முருகியலை
பரவசத்துட னேபார்க்க பலநாட்டா ரும்வந்தே
தரணிபோற்றும் பதிநல்லூர் அருள்நகரில்
நிறைந்தாரே
தேரடியில் அவனருளால் தெய்வீகம் பெருகியதே
பாரடிதோ ழியன்றேபெண் களுமேவந் துகுவிந்தார்
அழகியதே விகளோடு மகிழ்வுடனே
ஆர்ப்பரித்த அரோகராகோ சமும்கூட சிவந்தவேலன்
வந்தானே வடிவேல்வண் ணமதில்பக் தருறைந்தார்
கந்தனிருள் மழையும்பொழிந் ததேநல்லூர்
பதியினிலே...

கவிஞர் ரஜிதா அரிச்சந்திரன்

### பவனி வருகிறான் நிதமும் பவனி வருகிறான்

பவனி வருகிறான் வேலன் பவனி வருகிறார்
வல்லியர் இருவருடன் பவனி வருகிறார் வருகிறார்
அவனியெல்லாம் காத்திடவே காட்சிதருகிறார்
காவல்த் தெய்வம் வேலனாக காட்சிதருகிறார்

தவமிருந்து பக்தர்களும் தினமும் வருகிறார்
பலவினைகள் போக்கிடவே நேரில் வருகிறார்
சரவணபவ முருகநாமம் கூறி வருகிறார்
முருகன் புகழ் பாடியாடி கரம் குவிக்கிறார்

தாமரைபோல் பக்தர் முகம் தினமும் மலருதே
நாமங்கூறி உந்தன்புகழ் கூவியழைக்கிறார்
வேலவனாய் ஆறுமுகனாய் காட்சி தருகிறாய்
பாவமகல பவனிவந்து காட்சி தருகிறாய்

வேடிக்கையாய் நாடிடுவோர் புனிதமாவார்
நாடிநிதம் உனைத்துதிப்போர் அருள்பெறுவார்
கூடிவந்து பவனிகண்டு ஆர்ப்பரித்தோர்
காவடிகள் எடுத்து உனைச் சரணடைவார்

சி.சிவானந்தராஜா

# வாகனப் பாதுகாப்புக் கட்டணம் நல்லூரில் அதிகரித்து அறவீடு!

## மக்கள் குற்றச்சாட்டு

யாழ்ப்பாணம், செப். 15

நல்லூர்க் கந்தசுவாமி ஆலய வருடாந்தப் பெருந்திருவிழாவை முன்னிட்டு ஆலயச் சூழலில் அமைக்கப்பட்ட தற்காலிக வாகனப் பாதுகாப்பு நிலையங்களில் அதிகரித்த கட்டணம் அறவீடு செய்யப்பட்டுள்ளது என்று அடியவர்கள் குற்றஞ்சாட்டியுள்ளனர்.

அவர்கள்மேலும் கூறுகையில், யாழ்.மாநகரசபையால் சைக்கிளொன்றுக்கு 20 ரூபாவும், மோட்டார் சைக்கிளுக்கு 30 ரூபாவும், ஓட்டோவுக்கு 50 ரூபாவும் வாகனத்துக்கு 100 ரூபாவும் அறவிடப்படும் என்று நிர்ணயம் செய்யப்பட்டது.

ஆயினும் நல்லூர்க் கந்தனின் தேர்த்திருவிழாவான நேற்றுமுன்தினம் பல வாகனப் பாதுகாப்பு நிலையங்களில் மாறுபட்ட கட்டணங்கள் அறவீடு செய்யப்பட்டன. மோட்டார் சைக்கிளுக்கு 50 ரூபா மற்றும் 40 ரூபாவும் சைக்கிளுக்கு 30 ரூபாவும் அறவீடு செய்யப்பட்டன.



யாழ்.மாநகரசபை அதிகாரிகள் உடனடியாகத் தலையிட்டு இந்த விடயம் தொடர்பில் நடவடிக்கை எடுக்கவேண்டும் - என்றனர். (ச-66)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



வரலாற்றுச் சிறப்புமிக்க நல்லூர்க் கந்தசுவாமி ஆலய தேர்த்திருவிழா நேற்று முன்தினம் நடைபெற்ற நிலையில் பக்தர்கள் தங்கள் நேர்த்திக்கடன்களை நிறைவேற்றினர். அவற்றில் வித்தியாசமாக எடுக்கப்பட்ட தூக்குக்காவடிகள் அனைவரின் கவனத்தையும் ஈர்த்தது. (ச-66)

## ஆசிரிய கலாசாலையில் நூற்றாண்டு சிறப்புரை!



யாழ்ப்பாணம், செப். 15

கோப்பாய் ஆசிரியர் கலாசாலையின் நூற்றாண்டு கால ஒன்றுகூடல் நிகழ்வின் சிறப்புரைத் தொடர் நிகழ்வு நேற்று வியாழக்கிழமை கலாசாலையின் பிரதி அதிபர் க.செந்தில்குமரன் தலைமையில் நடைபெற்றது.

நிகழ்வில் பலாலி ஆசிரிய கலாசாலையின் முன்னாள் விரிவுரையாளரும் கல்வி அமைச்சு அதிகாரியுமான கோதை நகுலராஜா 'ஆசிரியத்துவத்தின் பெருமை' என்ற பொருளில் சிறப்புரையாற்றினார். தொடர்ந்து முன்னாள் விரிவுரையாளர் கோதை நகுலராஜா கலாசாலைச் சமூகத்தினரால் கௌரவிக்கப்பட்டார். (ச-இ)




### தென்மராட்சி வெற்றிக்கிண்ணம்

## நுணாவில் றொக்கர்ஸ் சம்பியன்!

யாழ்ப்பாணம், செப்.15

உதயன் ஊடக அனுசரணையுடன் நடைபெற்று வந்த தென்மராட்சிக் கிண்ணக் கிரிக்கெட் தொடரின் கிண்ணத்தைத் தனதாக்கிக் கொண்டது நுணாவில் றொக்கர்ஸ் அணி. இறுதியாட்டத்தில் நுணாவில் சுப்பர் கிங்ஸ் அணியும், நுணாவில் றொக்கர்ஸ் அணியும் மோதிக்கொண்டன.

முதலில் துடுப்பெடுத்தாடிய கைதடி சுப்பர் கிங்ஸ் அணி 9.4 ஓவர்களில் அனைத்து விக்கெட்டுகளையும் இழந்து 62 ஓட்டங்களைப் பெற்றது.

அந்த அணியின் சார்பாக தனுஸ்ராஜ் 14 ஓட்டங்களையும், ரூபன் 12 ஓட்டங்களையும், நிர்மலன் 12 ஓட்டங்களையும் அதிகபட்சமாகப் பெற்றனர். நுணாவில் றொக்கர்ஸ் அணி சார்பாகப் பந்துவீச்சில் பிரசாந்தன் 3 விக்கெட்டுகளையும், கிருபாகரன் 2 விக்கெட்டுகளையும், மாலவன் 2 விக்கெட்டுகளையும் கைப்பற்றினர்.

63 ஓட்டங்களை வெற்றி இலக்காகக் கொண்டு களமிறங்கிய நுணாவில் றொக்கர்ஸ் அணி 7.1 ஓவர்களில் இரு விக்கெட்டுக்களை இழந்து 63 ஓட்டங்களைப் பெற்று வெற்றிக் கிண்ணத்தைத் தனதாக்கியது.

நுணாவில் றொக்கர்ஸ் அணி சார்பாக றொக்சன் 40 ஓட்டங்களையும், மாலவன் 11 ஓட்டங்களையும், கிருபாகரன் 6 ஓட்டங்களையும் அதிகபட்சமாகப் பெற்றனர்.

கைதடி சுப்பர் கிங்ஸ் அணி சார்பாகப் பந்துவீச்சில் ரூபன் ஒரு இலக்கையும், லதுஜன் ஒரு இலக்கையும் கைப்பற்றினர்.

ஆட்டநாயகனாக நுணாவில் றொக்கர்ஸ் அணி வீரர் றொக்சன் தெரிவு செய்யப்பட்டார்.

தொடரில் அதிக ஓட்டங்களைப் பெற்ற கைதடி சுப்பர் கிங்ஸ் அணி வீரராக ரதுஜனும் (315 ஓட்டங்கள்), அதிக விக்கெட்டுகளை வீழ்த்திய வீரராக கைதடி ஸ்கை வோக்கர்ஸ் அணி வீரர் கஜனும் (28 ஓட்டங்கள்) தெரிவு செய்யப்பட்டனர்.

தொடரின் ஆட்டநாயகனாக கைதடி சுப்பர் கிங்ஸ் அணி வீரர் லதுஜன் தெரிவு செய்யப்பட்டார்.

வளர்ந்து வரும் வீரராக நுணாவில் றொக்கர்ஸ் அணி வீரர் விதுசன் தெரிவு செய்யப்பட்டார்.

இவர்களுக்கான விருதுகளும் வழங்கப்பட்டன. (ச-இ)

## மரண அறிவித்தல்



தோற்றம் 03 . 06 . 1956

மறைவு 14 . 09 . 2023

### திரு. அழகுப்பிள்ளை சுகுமார்

(ஓய்வுபெற்ற காணக்காளர்)

தொல்புரம் மேற்கினை பிறப்பிடமாகவும் யாழ்ப்பாணம் சீனிவாசகம் வீதி, கொட்டடியினை வசிப்பிடமாகவும் கொண்ட திரு.அழகுப்பிள்ளை சுகுமார் (ஓய்வுபெற்ற கணக்காளர்) நேற்று (14.09.2023) வியாழக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான அழகுப்பிள்ளை செல்வராணி தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான கிருஸ்ணபிள்ளை அன்னபூரணம் தம்பதிகளின் அன்பு மருமகனும், காலஞ்சென்ற நாராயணபிள்ளை (மலாயன் பென்சனியர்) இன் அன்புப் பேரனும், குணபாலதேவி (ஓய்வுபெற்ற ஆசிரியை) யின் அன்புக் கணவரும், வனிதா, சுசிகலா ஆகியோரின் அன்பு அண்ணனும், துளசி, கௌசி (கனடா), செந்தூர (3ஆம் வருட மருத்துவ பீட மாணவன் - பேராதனை பல்கலைக்கழகம்) ஆகியோரின் பாசமிகு தந்தையும், அருணன் (லக்ஸ்மி ரவல்ஸ்), லஸ்ரின் (கனடா) ஆகியோரின் அன்பு மாமனாரும், அபிநயா, மிஷல், ஆதவன் ஆகியோரின் பாசமிகு தாத்தாவும், சிவராசா (N.S) இன் அன்பு மருமகனும், நாகேந்திரன், நடராசா ஆகியோரின் அன்பு மைத்துன ரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (15.09.2023) வெள்ளிக்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக பொன்னாலை இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

29, சீனிவாசகம் வீதி,
கொட்டடி, யாழ்ப்பாணம்.

தகவல்:
குடும்பத்தினர்
077 468 7789, 077 318 3982

(cs.52097) (N.1)

## ன்றைய (ராசிபலன்)

**மேடம்:** புதிய முயற்சிகள் இழுபறியாகும். தாயாரின் உடல் ஆரோக்கியத்தில் கவனம் செலுத்தவும். எதிர்பார்த்த பண உதவி கிடைக்க வாய்ப்பு உண்டு.

**இடபம்:** மனதில் சிறுசிறு குழப்பங்கள் ஏற்பட்டு நீங்கும். குடும்பம் தொடர்பான முக்கியமான முடிவு எடுப்பதில் பொறுமை அவசியம். சங்கடங்கள் ஏற்படக்கூடும். வியாபாரத்தில் லாபம் உண்டாகும்.

**மிதுனம்:** உற்சாகமாகவும் பரபரப்பாகவும் செயற்படுவீர்கள். நினைத்த காரியத்தை நினைத்தபடி முடிப்பீர்கள். மனவருத்தங்கள் நீங்கும். சிரமம் எதுவும் இருக்காது.

**கடகம்:** புதிய முயற்சிகளில் ஈடுபட வேண்டாம். உறவினர்களிடம் எதிர்பார்த்த உதவி கிடைப்பது தாமதமாகும். அவ்வப்போது மனதில் குழப்பங்கள் ஏற்பட்டு நீங்கும்.

**சிம்மம்:** அவசர முடிவுகளைத் தவிர்க்கவும். காரியங்களில் பொறுமை மிக அவசியம். அதிகரிக்கும் செலவுகளால் கையிருப்பு கரையும். சிலருக்குக் கடன் வாங்கக்கூடிய சூழ்நிலையும் ஏற்படும்.

**கன்னி:** செலவுகள் அதிகரிக்கும் நாள். என்றாலும் தேவையான பணம் இருப்பதால் சமாளிப்பதில் சிரமம் இருக்காது. மகிழ்ச்சி தரும் செய்தி கிடைக்க வாய்ப்பு உள்ளது. ஆதாயம் கிடைக்கும். நண்பர்கள் உதவி கேட்டு வருவார்கள்.

**துலாம்:** ஆதாயம் கிடைக்கும். எதிர்பார்த்த காரியம் அனுகூலமாக முடியும். நீங்கள் தொடங்கும் புதிய முயற்சி வெற்றிகரமாக நிறைவேறும். மன இறுக்கம் நீங்கி நிம்மதி உண்டாகும்.

**விருச்சிகம்:** எதிர்பாராத பணவரவுக்கு வாய்ப்புண்டு. புதிய முயற்சிகள் அனுகூலமாகும் . மனதில் தேவை யற்ற பதற்றம் காணப்படும். மனஸ்தாபம் ஏற்பட வாய்ப்புள்ளது.

**தனுசு:** புதிய முயற்சிகளில் கூடுதல் கவனம் தேவை. எதிர்பார்த்த நற்செய்தி ஒன்று தேடிவரும். பணிச் சுமை அதிகரிப்பதால் சோர்வும் அசதி யும் உண்டாகும். செலவுகள் ஏற்படக்கூடும்.

**மகரம்:** மனதில் அவ்வப்போது சில குழப்பங்கள் ஏற்பட்டு நீங்கும். பிள்ளைகள் மூலம் குடும்பத்தில் பிரச்சினைகள் ஏற்பட வாய்ப்புள்ளது. பொறுமை அவசியம். எதிர்பார்த்த காரியம் இழுபறியாகும்.

**கும்பம்:** எதிர்பார்த்த பணம் கைக்கு வந்து சேரும். சகோதரர்கள் மூலம் ஆதாயம் உண்டாகும். எதிரிகளால் ஏற்பட்ட இடையூறுகள் நீங்கும். உடல் ஆரோக்கியம் மேம்படும்.

**மீனம்:** ஆன்மிகத்தில் நாட்டம் அதிகரிக்கும். சிலருக்கு தெய்வப் பிரார்த்தனையை நிறைவேற்றும் வாய்ப்பு ஏற்படும். மனதுக்கு உற்சாகம் தரும். புதிய முயற்சிகளில் யோசித்து ஈடுபடுவது நல்லது.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

உண்மை - நேர்மை - அஞ்சாமை
உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

## தீர்மானங்களும் கண்டிப்பும்

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் 54 ஆவது கூட்டத்தொடர் கடந்த திங்கட்கிழமை ஜெனிவாவில் ஆரம்பமானது. அன்றைய தினம் இலங்கையின் மனித உரிமைகள் நிலைவரம் தொடர்பில் மனித உரிமைகள் பேரவையின் பதில் ஆணையாளர் நாடா அல்நஷீப்பின் உரை இடம்பெற்றது. அவரது உரை ஐ.நா. மனித உரிமைகள் பேரவையின் வழமைக்கு மாறான ஒன்றாக அமைந்திருந்தது. இதுவரை காலமும் இலங்கையில் இறுதிப்போரின்போது இடம்பெற்ற மனிதாபிமான சட்ட மீறல்கள், மனிதகுலத்துக்கு எதிரான குற்றங்கள் தொடர்பில் விசாரணை நடத்துமாறு இலங்கை அரசை வலியுறுத்தி வந்த ஐ.நா., ஒரு கட்டத்தில் அத்தகைய விசாரணையொன்றை, உள்ளகரீதியில் நடத்தி முடித்து, நடவடிக்கைகள் எடுக்குமாறு இலங்கையைக் கோரியிருந்தது. ஆனால், இப்போது, நீங்கள் குற்றம் இழைத்திருக்கின்றீர்கள் என்பதை ஏற்றுக்கொள்ளவேண்டிய கடப்பாடு உங்களுக்கு உள்ளது என்பதை பதில் ஆணையாளரின் உரை எடுத்துரைத்திருக்கின்றது.

'கடந்தகால மனித உரிமை மீறல்களை ஒப்புக்கொள்ள வேண்டிய கடப்பாடு இலங்கைக்கு இருக்கின்றது' என்ற அவரது உரை, இலங்கையின் பதிலை எதிர்பார்த்துக் கூறப்பட்ட ஒன்றல்ல. ஐ.நா. மனித உரிமைகள் பேரவையின் முடிவை இலங்கைக்குக் கண்டிப்போடு சொல்வதாகவே அமைந்திருக்கின்றது. இலங்கையோ வழமை போன்று ஐ.நா.வின் தீர்மானங்களை நிறைவேற்ற மறுப்பதாகச் சொல்லியிருக்கிறது. இலங்கை ஐ.நா.வின் தீர்மானத்தை ஏற்க மறுத்திருந்தாலும் ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் அலுவலகம் இலங்கை தொடர்பான சாட்சியம் சேகரிக்கும் பொறிமுறையை உருவாக்கி நடைமுறைப்படுத்தி வருகின்றது. அந்த அலுவலகத்திடம் இலங்கையில் மனித உரிமை மீறல்களில் ஈடுபட்டார்கள் என்று சந்தேகிக்கப்படும் 10 பேர் தொடர்பான விவரங்களை பல்வேறு நாடுகளும் கோரியிருப்பதாக பதில் ஆணையாளர் தனது உரையில் குறிப்பிட்டிருந்தார். பூனை கண்ணை மூடிக்கொண்டு உலகம் இருட்டு என்பதைப்போல இலங்கை மனித உரிமைகள் பேரவையின் தீர்மானத்துக்கு ஒத்துழைக்க மறுத்தாலும், ஐ.நா. அதன் பணிகளைத் தொடர்ந்து முன்னெடுக்கின்றது என்பதை இலங்கைக்கு தெளிவாகவே சொல்லியிருக்கின்றது. ஐ.நா. மனித உரிமைகள் பேரவையின் உறுப்பு நாடுகள் பலவும் இலங்கையின் முன்னாள் ஜனாதிபதிகள், படைத்தளபதிகள் உட்படப் பலருக்கு பயணத்தடைகள் விதித்துள்ளன. இது இன்னமும் விரிவாக்கப்படவுள்ளது என்பதையே, ஐ.நா. மனித உரிமைகள் பேரவையின் பதில் ஆணையாளரின் கருத்து சுட்டிக்காட்டி நிற்கின்றது.

ஐ.நா. மனித உரிமைகள் பேரவையில் இலங்கை விவகாரம் எவ்வளவுதான் கடினமாக்கப்பட்டாலும் அதன் ஊடான விளைவுகள் இலங்கையை நேரடியாகத் தாக்கப்போவதில்லை. இலங்கை விவகாரத்தை பாதுகாப்புச்சபைக்கு பாரப்படுத்தும் வரையில் இலங்கையும் ஐ.நா.மனித உரிமைகள் பேரவையின் சொல்லைக் கேட்கப்போவதில்லை. உலக நாடுகள் இலங்கை அதிகாரிகளுக்குத் தடை விதித்தாலும் இலங்கை அது தொடர்பில் கண்டன அறிக்கை வெளியிடுவதுடன் முடித்துக் கொள்ளும். இதனால் அது இலங்கை என்கின்ற ஒட்டுமொத்த ஆட்சிப்பீடத்தின் மீது தாக்கம் எதையும் செலுத்தப் போவதில்லை. எனவே ஐ.நா. மனித உரிமைகள் பேரவையில் ஏற்பட்டுள்ள மாற்றத்தை இன்னமும் கனதியாக்கி, பாதுகாப்புச்சபைக்கு இலங்கை விவகாரத்தை நகர்த்தவேண்டும். இந்த விடயத்தில் தமிழ்த் தேசியக் கட்சிகளிடையே ஒருமித்த நிலைப்பாடு இன்னமும் எட்டப்படாமல் இருப்பதுதான் துரதிர்ஷ்டவசமானது. ஒவ்வொரு கட்சியும் தமது நிலைப்பாடே சரி என்பதில் உறுதியாக இருப்பதால், இவர்களுக்கிடையிலான கயிறிழுத்தலால் கனதியான நடவடிக்கைகள் எடுக்கப்படாமலேயே இடைநடுவில் நிற்கின்றன. சர்வதேச நீதிப் பொறிமுறை ஊடாகவே பாதிக்கப்பட்ட மக்களுக்கான நீதி கிடைக்கும் என்பதை அவர்கள் உறுதியாக நம்பினால், அந்த ஒற்றை இலக்கை நிர்ணயித்துக்கொண்டு ஒருமித்துப் பயணிப்பதே தற்போதைய காலச்சூழலில் மாற்றங்களைக் கொண்டுவரும்.

நாளொரு நல்வார்த்தை

உள்ளத்தில் நேர்மையும் தைரியமும்
இருந்தால் நடக்கும் பாதையும்
நேரானதாகவே இருக்கும்.
-பாரதியார்-



அமெரிக்கப் பயணத்தின்போது

# பைடன், மோடியை சந்திப்பார் ரணில்

**கொழும்பு, செப்.15**

**ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கும், இந்தியப் பிரதமர் நரேந்திர மோடிக்கும் இடையிலான இரு தரப்புப் பேச்சு அமெரிக்காவில் நடைபெறவுள்ளது. அமெரிக்க ஜனாதிபதி, பிரிட்டன் பிரதமர் உள்ளிட்ட தரப்புகளுடனும் ஜனாதிபதி இரு தரப்புப் பேச்சுகளில் ஈடுபடவுள்ளார்.**

அமெரிக்காவின் நியூயோர்க்கில் ஆரம்பமாகவுள்ள ஐக்கிய நாடுகள் பொதுச்சபையின் 78ஆவது கூட்டத்தொடரில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பங்கேற்கவுள்ளார்.

தமது நியூயோர்க் பயணத்தின்போது ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, ஐ.நா. செயலாளர் நாயகம் அன்டோனியோ குடரெஸ் மற்றும் ஏனைய உறுப்பு நாடுகளின் தலைவர்களையும் சந்தித்து கலந்துரையாட உள்ளார்.

அமெரிக்காவில் உள்ள சுமார் 40 முன்னணி தனியார் வர்த்தக நிறுவனங்களின் பங்குபற்றுதலுடன் நடைபெறவுள்ள இலங்கைக்கான பொருளாதார வாய்ப்புகள் தொடர்பான வட்டமேசை கலந்துரையாடலிலும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பங்கேற்க உள்ளார். கடல்சார் நாடுகளுக்கான மூன்றாவது ஆசியபசுபிக் தீவு நாடுகள் கலந்துரையாடலிலும் ஜனாதிபதி ரணில் உரையாற்றவுள்ளார். (எ-44)

## அடுத்த வருடம் முதல் இணையமூடாக பணம்

கொழும்பு, செப். 15

அனைத்து அரச நிறுவனங்களிலும் இணையவழியில் பணம் செலுத்தும் நடைமுறை கொண்டுவர திட்டமிடப்பட்டுள்ளது என்று தொழில்நுட்ப இராஜாங்க அமைச்சர் கனக ஹேரத் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும்கூறியதாவது:

இணையவழியில் பணம் செலுத்தும் முறை அடுத்த வருடத்தின் மார்ச் மாதத்துக்குள் அனைத்து அரச நிறுவனங்களிலும் நடைமுறைப்படுத்தப்படும். நாட்டிலுள்ள பிரதேச செயலகங்கள் மற்றும் பிரதேசசபைகள் ஊடாக சேவைகளை வழங்குவதற்கு அறவிடப்படும் கட்டணங்கள் இணையவழியில் மேற்கொள்ளப்படும். பல அரசநிறுவனங்களை மையப்படுத்தி இதற்கான முன்னோடித் திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது- என்றார். (ச-இ)

## மைத்திரிபாலவிடம் கோள்மூட்டிவிட்டனர்

### தயாசிறி எம்.பி. வருத்தம்

கொழும்பு, செப். 15

சுதந்திரக் கட்சியின் தலைமைப்பதவியைக் கைப்பற்றுவதற்கு நான் சூழ்ச்சி செய்யவில்லை. தற்போதைய அரசியல் நிலைமை குறித்து கடும் அதிருப்தியிலேயே இருக்கின்றேன் என்று நாடாளுமன்ற உறுப்பினர் தயாசிறி ஜயசேகர தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

நெருக்கடியான காலத்தில் கட்சியுடன் இருந்தேன், கட்சிக்காக உழைத்தேன், ஆனால் கட்சித் தலைமையிடம் சிலர் கோள்மூட்டியுள்ளனர். தலைமைப்பதவியை கைப்பற்றும் திட்டம் என்னிடம் இல்லை. அப்படியான துரோக அரசியலில் ஈடுபட்டதும் கிடையாது-என்றார். (எ-44)

நாளை
16.09.2023
சனிக்கிழமை
ஆவணி 30
சுபநேரம் : 03.03 - 04.33
ராகுகாலம் : 09.03 - 10.33

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# தனிநபர் முத்திரை வெளியீடு

யாழ்ப்பாணம், செப். 15

இலங்கையின் மூத்த இசைக் கலைஞரான சங்கீதபூஷணம் அளவெட்டி வி.கே.நடராஜா வின் 85ஆவது பிறந்த தினத்தை முன்னிட்டுதனிநபர் முத்திரை வெளியிடப்பட வுள்ளது.

இந்த நிகழ்வு எதிர்வரும் 17ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை அவரது இல்லத்தில் இடம்பெறும் என்று ஏற்பாட்டுக் குழு அறிவித்துள்ளது. (ச)

# சகல ஓட்டோக்களும் பதிவு செய்தல் கட்டாயம்

## யாழ். மாவட்டச் செயலக விசேட குழுக் கூட்டத்தில் தீர்மானம்

யாழ்ப்பாணம், செப். 15

**யாழ் .மாவட்டத்தில் வாடகை முச்சக்கர வண்டிகள் மற்றும் தனிப்பட்ட தேவைகளுக்காக முச்சக்கரவண்டிகள் பயன் பாடுகள் குறித்து அடையாளப்படுத்தும் வகையில் இனிவரும் காலங்களில் உள்ளூராட்சி மன்றங்களின் கீழ் பதிவு செய்தல் கட்டாயமானது என யாழ். மாவட்டச் செயலக விசேட குழுக் கூட்டத் தில் முடிவு செய்யப்பட்டுள்ளது.**

யாழ். மாவட்டச் செயலகத்தில் கடந்த செவ்வாய்க்கிழமை இந்தக் குழுக் கூட்டம் இடம்பெற்றது.

இதன்போது யாழ். மாநகரசபையின் கீழ் 2 ஆயிரம் ஓட்டோக்கள் பதிவு செய்யப்பட் டுள்ளன. மேலும் வீட்டுத் தேவைகளுக்கு போக்குவரத்தை மேற்கொள்பவர்கள் மீற்றர் பூட்டாது ஓட்டோவை செலுத்து கின்றபோது அவர்கள் பாதிப்புக்குள்ளா கின்றனர் என்று யாழ்.மாவட்டச் செயலர் அ. சிவபாலசுந்தரன் சுட்டிக்காட்டினார்.

வாடகை முச்சக்கர வண்டிகள் மற்றும் தனிப்பட்ட தேவைகளுக்காக முச்சக்கர வண்டிகள் பயன்பாடு குறித்து அடையாள படுத்த பொறிமுறை ஒன்று நடை முறைக்குக் கொண்டுவரவேண்டும்.

அதற்கமைய இரண்டு மாதங்களினுள் வாடகைக்குச் செயற்படும் முச்சக்கர வண் டிகள் அனைத்தும் உள்ளூராட்சி மன்றங் களில் பதிவுகளை மேற்கொள்ள வேண்டும் என்று ஒருங்கிணைப்புக் குழுத் தலைவர் தெரிவித்தார்.

யாழ். மாநகரசபை தரிப்பிடத்தில் மீற்றர் பொருத்தாத முச்சக்கரவண்டிகளை அகற்றுவதற்கு இரண்டு நாள்களினுள் நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்று உள் ளூராட்சி ஆணையாளர் பிரணவநாதன் தெரிவித்தார். (ச-125)

# கிளி. மக்கள் பாவனைக்கு 5 குடிதண்ணீர்த் தொகுதிகள்

கிளிநொச்சி, செப். 15

குடிதண்ணீர் வழங்கல் திட்டத்தின் முதற்கட் டமாக கிளிநொச்சியில் 5 குடிதண்ணீர்த் தொகுதிகள் மக்கள் பாவனைக்காகத் திறந்துவிடப்பட்டுள்ளன.

கிளிநொச்சி மாவட்ட மக்களுக்கு சுத்தமான குடிதண்ணீரைப் பெற்றுக்கொடுப்பதற்கான பணிகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

கரைச்சி மற்றும் கண்டாவளை ஆகிய பிர தேச செயலகப் பகுதிகளில் நிர்மாணிக் கப்பட்ட 5 குடிதண்ணீர்த் தொகுதிகள் முதற் கட்டமாக மக்கள் பாவனைக்காக நேற்று முன்தினம் திறந்துவைக்கப்பட்டன.

நிகழ்வில் கிளிநொச்சி மாவட்டச் செயலர் றூபவதி கேதீஸ்வரன், திணைக்கள அதி காரிகள், கிராம மக்கள் எனப் பலர் கலந்து கொண்டனர். (ச-27)

# ரிக்கெற்றைக் கொடுக்காது பணம் வசூலித்த நடத்துநர்!

## தட்டிக்கேட்ட சாலை முகாமையாளர் மீது தாக்குதல்

வவுனியா, செப். 15

இலங்கைப் போக்குவரத்துச்சபையின் வவு னியா சாலை முகாமையாளர் மீது இ. போ.ச. பேருந்தொன்றின் நடத்துநர் ஒரு வர் தாக்குதல் புரிந்துள்ளார்.

அநுராதபுரத்திலிருந்து வவுனியா நோக்கி வந்துகொண்டிருந்த பேருந்தில் இந்தச் சம் பவம் நேற்றுமுன்தினம் இடம்பெற்றது.

"பேருந்தின் நடத்துநர் பணத்தைப் பெற் றுக்கொண்டு பயணச்சீட்டு வழங்க வில்லை" என்று குறித்த பேருந்தில் பய ணித்த பயணியொருவர் வவுனியா சாலைக்கு தொலைபேசி அழைப்பெடுத்து தகவல் வழங்கினார்.

அதனையடுத்து உடனடியாக இ.போ. சபையின் வவுனியாசாலைமுகாமையாளர் மற்றும் பரிசோதனைக் குழுவினர் இணைந்து மதவாச்சிப் பகுதியில் வந்து கொண்டிருந்து பேருந்தை மறித்து சோத னையிட்டனர்.

அப்போது பேருந்தில் பயணித்த 20 பய ணிகளிடம் பணத்தைப் பெற்றுக்கொண்டு பயணச்சீட்டு வழங்காது தவறிழைத்தமை கண்டறியப்பட்டது.

அதனைத் தட்டிக்கேட்ட சாலை முகாமையா ளருடன் முரண்பட்ட நடத்துநர் அவரைத் தாக்கிவிட்டு அங்கிருந்து சென்றுள்ளார்.

சம்பவம் தொடர்பில் மதவாச்சி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்ட நிலையில் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (ச-110)

# வாகன இலக்கத் தகடுகள் பொறுப்பேற்க காலக்கெடு

## யாழ் .மாவட்டச் செயலர் அறிவிப்பு

யாழ்ப்பாணம், செப். 15

மோட்டார் வாகன போக்குவரத்துத் திணைக்கள யாழ்ப்பாண அலுவலகத்துக்குக்கிடைக்கப்பெற்ற வாகன இலக்கத்தகடுகளில், வாகன உரிமையா ளர்களால் இதுவரை பெற்றுக்கொள்ளப்படாத இலக்கத்தகடுகளை எதிர்வரும் 30ஆம் திகதி வரையே பெற்றுக்கொள்ளமுடியும் என்று யாழ். மாவட்டச் செயலகம் அறிவித்துள்ளது.

இதுதொடர்பில் யாழ்.மாவட்டச் செயலர் விடுத்த ஊடக அறிக்கையில்,

மோட்டார் வாகனப் போக்குவரத்துத் தலைமை அலுவலகத்திலிருந்து யாழ்ப்பாண அலுவலகத் துக்கு இந்த வருடத்தின் முதலாம் திகதியிலிருந்து ஜூன் 30ஆம் திகதி வரையான காலப்பகுதியில் கிடைக்கப்பெற்ற பல வாகன இலக்கத்தகடுகள் வாகன உரிமையாளர்களால் இதுவரை பெற் றுக்கொள்ளப்படாதுள்ளன.

இந்த வாகன இலக்கத்தகடுகளை வாகன உரி மையாளர்கள் எதிர்வரும் 30ஆம் திகதிக்கு முன்னதாகப் பெற்றுக்கொள்ள வேண்டும். தவ றினால் தலைமை அலுவலகத்துக்குத் திருப்பி அனுப்பப்படும். மேற்படி வாகன இலக்கத்தகடு களின் பட்டியல் யாழ்ப்பாண மாவட்டத்திலுள்ள அனைத்து பிரதேச செயலகங்களிலும் காட்சிப் படுத்தப்பட்டுள்ளது - என்றுள்ளது. (ச-100)




# வவு. பல்கலையின் வரவேற்புப் பதாகையில் தமிழ்மொழி புறக்கணிப்பு

வவுனியா, செப். 15

மூவினத்தைச் சேர்ந்த மாணவர்கள் கல்விபயிலும் வவுனியா பல்கலைக்கழகத்தில் அமைக்கப்பட்ட வரவேற்புப் பதாகை யொன்றில் தமிழ்மொழி புறக்கணிக்கப்பட்டுள்ளது.

வவுனியா பல்கலைக்கழகத்தில் புதிய மாணவர்களை அனும திக்கும் நிகழ்வு கடந்த இரு தினங்கள் இடம்பெற்றன.

இந்த நிகழ்வை வவுனியா பல்கலைக்கழகத்தின் பிரயோக விஞ்ஞானபீட மாணவர்கள் ஏற்பாடு செய்திருந்தனர்.

நிகழ்வில் வரவேற்புப் பதாகை ஒன்று அமைக்கப்பட்டிருந்தது. அந்தப் பதாகையில் சிங்களமொழிக்கு முன்னுரிமை அளிக் கப்பட்டு ஆங்கிலமொழியும் இணைக்கப்பட்டிருந்தது. ஆனால் தமிழ்மொழி புறக்கணிப்புச் செய்யப்பட்டிருந்தது.

இந்தப் பதாகை அமைக்கும்போது பல்கலைக்கழக நிர்வாகம் மும்மொழிப் பங்களிப்பின் முக்கியத்துவம் பற்றி மாணவர் களுக்கு எடுத்துரைக்கவில்லையா? என்று பலதரப்பினரும் கேள்வியெழுப்பியுள்ளனர். (ச-110)

## தையிட்டி திஸ்ஸ விகாரைக்காக

# காணி அபகரிக்கும் நடவடிக்கை மக்களின் எதிர்ப்பால் நிறுத்தம்!

யாழ்ப்பாணம், செப். 15

தையிட்டியில் சட்டவிரோத திஸ்ஸ விகாரைக்காக மேலும் காணிகள் அபகரிக்கும் நடவடிக்கை மக்களின் எதிர்ப்புப் போராட்டத்தால் இடைநிறுத் தப்பட்டுள்ளது.

வலிகாமம் வடக்குத் தையிட்டியில் சட்டவிரோதமாக அமைக்கப்பட்ட திஸ்ஸ விகாரைக்காக மேலும் தனி யார் காணிகளை அபகரிக்கும் நோக் கில் நில அளவீடு செய்யும் நடவ டிக்கை கடந்த செவ்வாய்க்கிழமை முன்னெடுக்கப் படவிருந்த நிலை யில் பொதுமக்கள், தமிழ்த்தேசிய அரசியல்வாதிகள், பொது அமைப் புகளின் பிரதிநிதிகளெனப் பலரும் ஒன்றுகூடி எதிர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்ட நிலையில் அளவீட்டு நடவ டிக்கைகள் தற்காலிகமாக இடைநி றுத்தப்பட்டன.

காலை 8 மணியளவில் தையிட்டி திஸ்ஸ விகாரைக்கு அருகில் ஒன்று கூடிய பல்வேறு தரப்பினர் காணி அபகரிப்பு நடவடிக்கைக்கு எதிராக விகாரைக்குச் செல்லும் வீதியின் இருமருங்கிலும் நின்று அமைதி யான முறையில் எதிர்ப்புப் போராட் டத்தை முன்னெடுத்தனர்.

நாடாளுமன்ற உறுப்பினர்களான சிவஞானம் சிறீதரன், கஜேந்திரகு மார் பொன்னம்பலம், செல்வராசா கஜேந்திரன், அரசியல் கட்சிகளின் செயற்பாட்டாளர்கள், பொது அமைப் பு களின் பிரதிநிதிகள், பொதுமக்கள் எனப் பலரும் போராட்டத்தில் கலந்து கொண்டனர். (ம-66-27)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


சந்திரகுமார் அமல அசாம்


நாகராசா மியூசிகா


யேசுதாசன் அலக்ஸ் றனிஸ்ரன்


ஜெயக்குமார் தமிழரசி

# வாழ்வக மாணவர்களின் மகத்தான சாதனை

இந்த முறை வெளியான உயர்தரப் பெறுபேறுகளின்படி, குறித்த பரீட்சைக்குத் தோற்றிய வாழ்வக மாணவர்கள் அனைவருமே சித்திபெற்றுள்ளனர்.

இவர்களுள், தெல்லிப்பழை யூனியன் கல்லூரியில் பயின்ற செல்வன் சந்திரகுமார் அமல அசாம் அரசறிவியல், தமிழ் மொழி, கிறிஸ்தவ நாகரிகம் ஆகிய மூன்று பாடங்களிலும் 'ஏ' சித்திபெற்றதுடன், மாவட்ட மட்டத்தில் 13 ஆம் இடத்தையும் தேசிய மட்டத்தில் 693 ஆம் இடத்தையும் பெற்றுச் சாதனைபுரிந்துள்ளார். அதேகல்லூரியில் பயின்ற மற்றுமொரு வாழ்வக மாணவனான செல்வன் யேசுதாசன் அலக்ஸ் றனிஸ்ரன் கருநாடக சங்கீதத்தில் 'பி' சித்தியும் கிறிஸ்தவ நாகரிகம், ஊடகக் கற்கை ஆகிய பாடங்களில் 'சி' சித்தியும் பெற்றுள்ளார்.

சுன்னாகம் இராமநாதன் கல்லூரியில் கல்வி கற்ற வாழ்வக மாணவிகளான செல்வி ஜெயக்குமார் தமிழரசி இந்துநாகரிகத்தில் 'ஏ' சித்தியும் தமிழ்மொழியில் 'சி' சித்தியும் அரசறிவியலில் 'எஸ்' சித்தியையும் செல்வி நாகராசா மியூசிகா தமிழ்மொழியில் 'சி' சித்தியும் அரசறிவியல், கிறிஸ்தவ நாகரிகம் ஆகிய பாடங்களில் 'எஸ்' சித்தியையும் பெற்றுள்ளனர்.

இந்தச் சாதனையையடுத்து வாழ்வக சமூகத்தினர் பெருமை கொள்வதாகவும் அனைத்து மாணவர்களையும் அவர்களுக்கு கற்பித்த மேற்குறித்த பாடசாலை அதிபர், ஆசிரியர்களையும் பாராட்டிநன்றியையும் தெரிவித்துள்ளனர். (ய)


கடந்த 4ஆம் திகதி திங்கட்கிழமை வெளியாகிய உயர்தரப் பரீட்சைப் பெறுபேற்றின்படி கிளிநொச்சி - பூநகரி வினாசிஓடை மகா வித்தியாலய மாணவி உதயகுமார் நிறஞ்சனா கலைப்பிரிவில் 3'ஏ' சித்திகளைப் பெற்று மாவட்டநிலையில் இரண்டாமிடத்தை பெற்று பாடசாலைக்கும் மாவட்டத்துக்கும் பெருமைசேர்த்துள்ளார். (ய-113)


கடந்த 4ஆம் திகதி திங்கட்கிழமை வெளியாகிய உயர்தரப் பரீட்சைப் பெறுபேற்றின்படி முல்லைத்தீவு - மல்லாவி மத்திய கல்லூரி மாணவன் விஜயகுமார் மிதுசன் உயிரியல் பிரிவில் சிறந்த பெறுபேறுகளைப் பெற்று மாவட்ட ரீதியில் முதலிடத்தை பெற்று பாடசாலைக்கும் மாவட்டத்துக்கும் பெருமைசேர்த்துள்ளார். (ய-27)

# உயர்தரப் பரீட்சைப் பெறுபேறுகள்

*யாழ்ப்பாணம், செப்.15*

கல்விப் பொதுத்தராதர உயர்தரப் பரீட்சையின் முடிவுகள் கடந்த 4ஆம் திகதி திங்கட்கிழ[illegible] வெளியிடப்பட்டன. கிடைக்கப்பெற்ற பாடசாலைகளின் பரீட்சை முடிவுகள் வருமாறு:-

## யா/ வீரசிங்கம் மத்திய கல்லூரி

**கணிதப் பிரிவு**

க.கவிசனா - ஏபிசி, பே.மதுஷிகா - 3பி, ப.நிலக்ஷி -ஏபிசி, பிருசாளினி- பி2சி, வி.கஜிந்தன் -பி2சி, கு.அபிசனா -பி2சி, த.துவாரகன்- 3சி, நிலக்சன்- 2சிஎஸ்.

**விஞ்ஞானப்பிரிவு**

கு.வேணுஜா- ஏபிசி, சி.துஸந்தி - பி2சி, அ.தர்மினா - 3சி, ம.திகல்யா- 3சி, நா.சிந்துஜா- 3சி, சி.டிலக்சனா -3சி.

**வர்த்தகப்பிரிவு**

ச.நிலாஜினி - 3ஏ, சி.சுபா- 3ஏ, சி.ஜனகன் - 2ஏபி, த.பகீரதன் - 2ஏபி, சி.டயானா - 2ஏசி, ம.ஜெனுசா - 3சி, சு.றொபேட் வின்சன் - 3சி, கி.சைத்தன்யா - 3சி, இ.தரணியா - 2சிஎஸ்.

**கலைப்பிரிவு**

ஜோன்வோல்ட் ஜயித் -3ஏ, சக்திவேல் டிலானி -3ஏ, இராசவிநாயகம் நர்மலா -3ஏ, செல்வதாஸ் சானுஜா -3ஏ, அருந்தவராசா ரபிசா - 2ஏபி, நகுலேந்திரன் சகீனா -2ஏபி, ரவிக்குமார் கௌசிகா - 2ஏபி, மதியழகன் நிதர்சன் - 2ஏபி, செல்வரஞ்சன் யட்சனா - 2ஏபி, மாணிக்கராசா கிஷானி - 2ஏபி, சிவானந்தம் கலையரசி - 2ஏபி, சற்குணராசா டிலேந்தினி - 2ஏபி, ஜெயகாந்தன் மதுரா - 2ஏபி, கரிதாஸ் ருஷானி - ஏ2பி, மகாதேவன் லட்சியா - ஏ2பி, இராஜேஸ்வரன் சானுகா - ஏ2பி, தயாளன் கலைக்சனா - ஏ2பி, லிசீந்திரன் ஜானுயா - ஏ2பி, செல்வராசா சுவஸ்திகா - ஏ2பி, சிவராசா சரண்யா - ஏ2பி, ரவிசடசந்திரன் லக்சனா - ஏபிசி, சிவயோகராசா தினேசா - ஏபிசி, செல்வரத்தினம் அனுசியா - ஏ2சி, செல்வரத்தினம் காஞ்சனா - ஏ2சி, மதனகுமார் காருண்யா - ஏ2சி, ஜெயரூபன் கருணதீபா - ஏ2சி, செல்வரத்தினம் ரசிந்தா - 2பிசி, பாலகிருஷ்ணன் சபிதா - 2பிசி, மோகனதாஸ் தரனுகா - 2பிசி, ஜீவரத்தினம் சயந்தன் - 3பி, தட்சணாமூர்த்தி விதுசா - பி2சி, கணநாதன் றினோஜா - பி2சி, ஸ்ரீதரன் கஸ்தூரி - பி2சி, ஸ்ரீதரன் ஸ்ரீரஞ்சினி -2பிஎஸ், ஸ்ரீகாந்தரூபன் பிரசாந்தினி - 2பிஎஸ், சிவகுமார் சுருதிகா - 2பிஎஸ், உதயகுமார் நினுஜா - பி2எஸ், குமரகுருநாதன் கம்சிகன் - ஏ2எஸ், சேவியர் தர்ஷிகா - ஏ2எஸ், உதயகுமார் பாவலன் - 3சி, உதயகுமார் உஷாந்தினி - 3சி, சிவானந்தநாயகம் கிருசா - 2சிஎஸ், அமிர்தலிங்கம் லதுசனா - 2சிஎஸ், இரத்தினராசா மதுசா - 2சிஎஸ், ஜெகதீஸ்வரன் கோமளா - 2சிஎஸ், அன்ரனி தனுசா - சி2எஸ், சிவநாதன் விதுசா - 2சிஎஸ், சிவபாலகுமார் டனுசா - 2சிஎஸ், சிவகானந்தன் சிவானுஜன் - சி2எஸ், சாந்தலதன் மிதுசன் - சி2எஸ், ஸ்கந்தராசா அபிதா - சி2எஸ், மனோகரன் சைந்தவி - சி2எஸ்


கடந்த 4ஆம் திகதி திங்கட்கிழமை வெளியாகிய உயர்தரப் பரீட்சையில் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி மாணவன் ஆனந்தஜோதி வித்தியாஷாகர் உயிரியல் விஞ்ஞானப் பிரிவில் சிறந்த பெறுபேறுகளைப் பெற்று யாழ்.மாவட்டத்தில் முதலிடத்தையும், தேசிய ரீதியில் ஒன்பதாவது இடத்தையும் பெற்று பாடசாலைக்கும் மாவட்டத்துக்கும் பெருமை சேர்த்துள்ளார். (ய-66)



# பிரத்தியேக வகுப்புகளுக்கு செல்லாது கணிதப் பிரிவில் மாணவன் முதலிடம்

மன்னார், செப்.15

கடந்த 4ஆம் திகதி திங்கட்கிழமை வெளியாகிய உயர்தரப் பரீட்சையில் எந்தவித தனியார் பிரத்தியேக வகுப்புகளுக்குச் செல்லாமலேயே மன்னார் மாவட்டத்தில் மடு கல்வி வலயத்திலுள்ள அடம்பன் மத்திய மகா வித்தியாலய தேசியப் பாடசாலை மாணவன் தியாகன் டேவதரன் கணிதப் பிரிவில் 3'ஏ' சித்திகளைப் பெற்று முதல் நிலையையும் அகில இலங்கை ரீதியில் 465 ஆவது இடத்தையும் பெற்று பாடசாலைக்கும் மாவட்டத்துக்கும் பெருமைசேர்த்துள்ளார். (ய-60)




உயர்தரப் பரீட்சையில் 3'ஏ 'சித்திகளைப் பெற்று யாழ். மாவட்டத்தில் முதலிடம் பெற்ற வரணி மத்திய கல்லூரி மாணவி ஆர்.சுவர்க்கா, கிளிநொச்சி லயன்ஸ் கழகம் மற்றும் நியூ லலிதா நகையகத்தினர் ஆகியோரினால் கடந்த 7ஆம் திகதி வியாழக்கிழமை பரிசில் வழங்கி கௌரவிக்கப்பட்டார். (ய-153)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நாகபூஷணி திருமண சேவை


**MBBS, BSC Civil Engineering, BSC, MSC, LLM, IT Professionals, CIMA, BBA, MBA, BA** கற்று வேலை செய்பவர்கள் மற்றும் Teachers, Govt Jobs, உள்நாட்டு வெளிநாட்டு மணமக்கள் எம்மிடம் ஏராளமாக உள்ளனர். மிகப் பொருத்தமான மணமக்கள் ஜாதகங்கள் எம்மால் தெரிவு செய்யப்பட்டு உடன் தரப்படும்.

**264, ஆடியபாதம் வீதி, கொக்குவில் கிழக்கு, யாழ்ப்பாணம்.**

**021 222 9306, 077 138 7596, 071 999 9306**

(CS 26259)A-1


# பழுதடைந்த நிலையில் கேக் விற்பனை; வெதுப்பகத்துக்கு எதிராக முறைப்பாடு




வவுனியா, செப். 15

பழுதடைந்த கேக்கை விற்பனை செய்ததாக வவுனியா வைரவப் புளியங்குளம் பகுதியில் உள்ள வெதுப்பகம் ஒன்றுக்கு எதிராக முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

பொதுச் சுகாதாரப் பரிசோதகர்களிடமே குறித்த முறைப்பாடு நேற்று முன்தினம் புதன்கிழமை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

வைரவப்புளியங்குளம் பகுதியில் உள்ள பிரபல வெதுப்பகம் ஒன்றில் விற்பனை செய்யப்பட்ட 'அடைகேக்' ஒன்றைக் கொள்வனவு செய்தவர் குறித்த கேக் பழுதடைந்த நிலையில் காணப்படுவதாக பொதுச் சுகாதாரப் பரிசோதகரிடம் முறைப்பாடு செய்துள்ளார். குறித்த முறைப்பாட்டையடுத்து சுகாதாரப் பரிசோதகர்கள் சம்பவம் தொடர்பில் பரிசோதனைகளையும் விசாரணைகளையும் முன்னெடுத்துள்ளனர். (ஒ-ரி-218)

## 24ஆம் ஆண்டு நினைவலைகள்



மகிழ்வில் 07 . 01 . 1977

துன்பத்தில் 10 . 09 . 1999

### அமரர் குணசிங்கம் ஞானேந்திரன்

(குட்டி கண்ணா)

(கோபிகா ஆடையகம் உரிமையாளர்)

நல்லூரான் திருவிழாக் காணும்
நன்நாளில் உன்னை நினைந்து
எமது மனம் ஏங்குகின்றதடா!
நீ எம்மை விட்டுச் சென்று
இருபத்து நான்கு வருடங்கள் ஆனதடா - கண்ணா
ஆனால் என்றும் உனது நினைவுகள்
எம்மை விட்டுச்செல்லாதடா.

40/6, புகையிரத வீதி,
கிழக்கு ஒழுங்கை,
கந்தர்மடம்.

உனது பிரிவால் துயருறும்
குடும்பத்தினர்

(cs.26209)(N.1)

## நூலகப் பிரிவும் வாசிப்பு குடிலும் திறப்பு நிகழ்வு

யாழ்ப்பாணம், செப். 15

யாழ்.ஸ்கந்தவரோதயக் கல்லூரியில் சிறுவர் நூலகப் பிரிவும் வாசிப்பு குடிலும் திறப்பு நிகழ்வு பாடசாலை அதிபர் மு.செல்வஸ்தான் தலைமையில் இன்று வெள்ளிக்கிழமை காலை 8.30 மணிக்கு நூலக வளாகத்தில் இடம்பெறவுள்ளது.

(ச)

## இலவச கண் பரிசோதனை முகாம்

யாழ்ப்பாணம், செப். 15

யாழ். போதனா மருத்துவமனையின் இலவச கண்புரை சத்திரசிகிச்சை நோயாளர்களைத் தெரிவு செய்யும் கண் பரிசோதனை முகாம் நாளை சனிக்கிழமை யாழ்ப்பாணம், நல்லூர் சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவுகளில் இடம்பெறவுள்ளதாக மருத்துவக் கலாநிதி கேதீஸ்வரன் தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாண சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவுக்குட்பட்ட பொதுமக்களுக்கான முகாம் யாழ்ப்பாணம் பொம்மைவெளி கிளினிக் நிலையத்திலும், நல்லூர் சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவுக்குட்பட்ட பொதுமக்களுக்கான முகாம் செங்குந்தா இந்துக் கல்லூரியிலும் நாளை காலை 9 மணி தொடக்கம் இடம்பெறவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

(ஒ-ரி3-100)

## அறிவித்தல்

யாழ். பல்கலைக்கழக விவசாய பீட முன்கற்றோர் அவையின் வருடாந்த பொதுக்கூட்டமும், புதிய நிர்வாகக் குழு உறுப்பினர் தெரிவும் எதிர்வரும் (16.09.2023) சனிக்கிழமை மாலை 3.00 மணிக்கு யாழ். பல்கலைக்கழக பட்டப்பின்படிப்பு கற்கைகள் பீடத்தின் கேட்போர் கூடத்தில் ஒழுங்குபடுத்தப்பட்டிருப்பதால் விவசாயபீட முன்கற்றோர் அனைவரையும் நிகழ்வில் கலந்துகொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.

விவசாயபீட முன்கற்றோர் அவை
செயற்குழு.

(CS 26212) A-1

## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை
## திறந்த மற்றும் தொலைக்கல்வி நிலையம்

### வெளிவாரிப் பாடநெறிகளுக்கான துரிதமீட்டல் வகுப்புக்கள் மற்றும் பரீட்சைகள் - 2022

- கலைமாணி- பகுதி- II- 2022 (பழைய பாடத்திட்டம்) (இறுதிச் சந்தர்ப்பம்)
- நடனமாணி / இசைமாணி மூன்றாம் வருடத் தேர்வு- 2022 (பழைய பாடத்திட்டம்) (இறுதிச் சந்தர்ப்பம்)

மேற்படி பரீட்சைகளுக்கான துரிதமீட்டல் வகுப்புக்கள் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் எதிர்வரும் அக்டோபர் மாத இறுதியில் நடாத்துவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

இப்பரீட்சைக்கு தோற்றத் தகுதியான பரீட்சார்த்திகள் திறந்த மற்றும் தொலைக்கல்வி நிலையத்திலோ அல்லது www.codl.jfn.ac.lk எனும் இணையத்தள முகவரியிலோ விண்ணப்பப்படிவத்தினைப் பெற்றுக்கொள்ளலாம்.

பரீட்சார்த்திகள் தோற்றும் பாட அலகொன்றிற்காக செலுத்த வேண்டிய கட்டணம் ரூபா 2500.00 இனை மக்கள் வங்கி கணக்கிலக்கம் 890002340002319 இல் செலுத்தி பற்றுச்சீட்டின் மூலப்பிரதியினை விண்ணப்பப்படிவத்துடன் இணைத்தல் வேண்டும்.

மேற்படி பரீட்சைகளுக்கான பூர்த்திசெய்யப்பட்ட விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்வதற்கான இறுதித் திகதி 29.09.2023 (வெள்ளிக்கிழமை). மேலும் பரீட்சை நேர அட்டவணை மற்றும் விபரங்கள் பின்னர் தனித்தனியேயும் இணையத்தளத்தின் ஊடாகவும் (www.codl.jfn.ac.lk) அறியத்தரப்படும்.

பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப்படிவங்களினை திறந்த மற்றும் தொலைக்கல்வி நிலையத்தில் அலுவலக நேரத்தில் (காலை 08.30 மணி தொடக்கம் மாலை 04.15 மணி வரை) சமர்ப்பிக்கலாம் அல்லது பதிவுத் தபால் மூலம் அனுப்ப விரும்புவோர் கீழ்த் தரப்பட்டுள்ள முகவரிக்கு அனுப்பிவைக்கலாம்.

**உதவிப் பதிவாளர்,**
**திறந்த மற்றும் தொலைக்கல்வி நிலையம்,**
**யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், திருநெல்வேலி**

மேலதிக விபரங்களைப் பெறவிரும்புவோர் 021-222-3612 என்ற தொலைபேசி எண்ணினூடாக அல்லது www.codl.jfn.ac.lk என்ற இணைய முகவரியூடாக தகவல்களைப் பெற்றுக்கொள்ளலாம்.


**பதிவாளர்**
**யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்**
**14.09.2023**

(cr. 40573) (N.1)

## மரண அறிவித்தல்

தோற்றம் 18 . 08 . 1937

மறைவு 14 . 09 . 2023



### திரு.பண்டாரி தவராசா

**(ஓய்வுபெற்ற பிரதம இலிகிதர், உணவுக் கட்டுப்பாட்டுத் திணைக்களம்)**

மீசாலையை பிறப்பிடமாகவும் மாம்பிராய் காங்கேசன்துறையையும், 101, ஓட்டுமடம் வீதி, யாழ்ப்பாணத்தையும் வதிவிடமாக கொண்ட திரு. பண்டாரி தவராசா நேற்று (14.09.2023) வியாழக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற பண்டாரி தெய்வானை தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்ற நாகமுத்து நாகம்மா தம்பதியரின் பாசமிகு மருமகனும், ஜெயராணியின் (ஓய்வுபெற்ற ஆசிரியை, யா/யாழ். இந்து ஆரம்ப பாடசாலை) அன்புக் கணவரும், அன்னப்பிள்ளை, அம்மா, சின்னத்தங்கம் ஆகியோரின் பாசமிகு சகோதரரும், முத்துவின் அருமை மைத்துனரும், மலர், ராணி, இந்திரா, சின்னராசா, துரை, குஞ்சு, சிறி, சந்திரா, ஜெயகோவிந்தமலர், சாரதாபவானி, சோமகலாவல்லி, சிவசோதி (சிவா), பகிரதன் ஆகியோரின் அன்பு மாமனாரும், சோபி, சுரேகா, ரதி, கண்ணன், சுமன், சுஜீதா, சுமிந்தா, றொசான், சாகித்தியன், திலக்ஷன், டிலோசன், கென்சிகா ஆகியோரின் பாசமிகு பேரனாரும், பாலசுப்பிரமணியம், இராஜேஸ்வரி, நாகரஞ்சினி, ரகுநாதன், காலஞ்சென்ற சறோஜா (சாரதா) ஆகியோரின் அருமை மைத்துனரும், லட்சுமி, சந்திரலிங்கம் (சந்திரன்), நிர்மலாதேவியின் அருமை சகலனும், ராகவேந்திரன், ரகுநந்தன், சுநயனி, கஜசுதன் ஆகியோரின் அன்புப் பெரியப்பாவும், பாலேந்திரன், அமிர்தவாகினி, திவ்வியாஷினி, விதுர்ஷினி, சுரம்மியன், சுதர்மியன், கிரு ஆகியோரின் பாசமிகு மாமனாரும், வைஸ்ணவி, ராகவி, தரங்கவி, ததுவர்த்தனி, தனுபகன், தருநிகன் ஆகியோரின் அன்புப் பேரனும், ராஜ்குமார், சுகந்தாதேவி ஆகியோரின் அன்புச் சித்தப்பாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (15.09.2023) வெள்ளிக்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக மதியம் 12.00 மணிக்கு கோம்பயன் மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**101, ஓட்டுமடம் வீதி,**
**யாழ்ப்பாணம்.**

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

(CS 26210) A-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வயல்களுக்கு வைத்த தீயால் வாகன விபத்து

யாழ்ப்பாணம், செப். 15

யாழ்ப்பாணம் ஆவரங்கால்வெளிப் பகுதியில் வயல்களுக்கு வைத்த தீயால் வாகனங்கள் விபத்துக்குள் சிக்குகின்றன என்று அந்தப்பகுதியால்பயணம்செய்பவர்கள்குற்றஞ்சாட்டுகின்றனர். தீயால் மேலெழும் கரும்புகை எதிர்ப்படும் வாகனங்களை மறைக்கும் அளவுக்கு போக்குவரத்துக்கு நெரிசலை ஏற்படுத்துகின்றன. அத்துடன் வயலுக்கு வைக்கப்படும் தீ காரணமாக எரிவடைந்த பயிர்த்துண்டுகள் மற்றும் தணல்கள் என்பனவும் காற்றுடன் காற்றாகப் பறந்துவந்து வாகனங்களுக்குள் செல்கின்றன. இதுவும் வாகன விபத்துக்களுக்குக் காரணமாக அமைகின்றது. இவ்வாறான அசம்பாவிதத்தால் நேற்றும் இரண்டு வாகனங்கள் விபத்துக்குள்ளாகியுள்ளன என்று பயணிகள் மேலும் தெரிவிக்கின்றனர். (அ-ம-26)


உற்சாகமாய் இருப்போம்
நீரிழிவு நோயை தடுப்போம்

GINSOMIN®




சுறுசுறுப்பான, புத்துணர்வான, பலமான மற்றும் மகிழ்ச்சியான வாழ்க்கைக்கு

**Ginsomin** இன் பிரதான கூறான அசல் கொரியன் பன்க்ஸ் ஜின்சென் உடலில் இன்சுலின் செயற்பாட்டை மேம்படுத்துவதோடு இன்சுலின் எதிர்ப்பு செயற்பாட்டை குறைக்கிறது என்பது மருத்துவ ரீதியில் உறுதி செய்யப்பட்டுள்ளது.

நாடளாவிய ரீதியிலான சுப்பர் மார்க்கட்டுகள் மற்றும் பாமசிகளில் பெற்றுக்கொள்ளலாம்.

MEGA We care
For Your Wellness
www.megawecare.lk

077 34 100 71
011 43 66 609

YouTube f
Ginsomin Srilanka

இறக்குமதி செய்து விநியோகிப்போர்: A Baur & Company (Pvt) Limited


# மூதாட்டியிடம் சங்கிலி அறுப்பு

கொடிகாமம், செப். 15

வீட்டில் இருந்து கோவிலுக்குச் சென்ற 80 வயது மூதாட்டியின் கழுத்தில் இருந்த இரண்டேகால் பவுண் தங்கச் சங்கிலி கொள்ளையிடப்பட்டுள்ளது. மிருசுவில் வடக்குப் பகுதியில் நேற்று இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

மோட்டார்சைக்கிளில் வந்த இருவரே மூதாட்டியைக் கீழே தள்ளிவிட்டு சங்கிலியை அறுத்துக்கொண்டு தப்பியோடியுள்ளனர். மூதாட்டி அயலவர்களால் மீட்கப்பட்டு அவரது வீட்டுக்கு அழைத்துவந்து விடப்பட்டுள்ளார். இது தொடர்பில் பொலிஸாரிடம் முறைப்பாடு பதிவுசெய்யப்பட்டுள்ளது. (அ-ம-159)

# வீடுடைத்துத் திருட்டு: இரு சிறுவர்கள் கைது

யாழ்ப்பாணம், செப். 15

வேலணை சரவணை பகுதியில் வீடு உடைத்து பணம், மற்றும் தங்க நகைகளைத் திருடிய குற்றச்சாட்டில் இரண்டு சிறுவர்கள் நேற்றுக் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

கைதான சிறுவர்கள் 15 மற்றும் 16 வயதுடையவர்கள். அவர்கள் இருவரையும் சிறுவர் நீதிமன்றத்தில் முற்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (அ-ம-23)

## நெடுந்தீவுக் கடற்பரப்பில்

# எல்லை தாண்டி மீன்பிடி; 19 இந்திய மீனவர் கைது

யாழ்ப்பாணம், செப். 15

எல்லை தாண்டி இலங்கைக் கடற்பரப்புக்குள் மீன் பிடித்த குற்றச்சாட்டில் நெடுந்தீவு கடற்பரப்பில் வைத்து இராமேஸ்வரத்தைச் சேர்ந்த 19 மீனவர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

ரோந்துப் பணியில் ஈடுபட்டிருந்த இலங்கைக் கடற்படையினரால் நேற்றுமுன்தினம் புதன்கிழமை இந்தக் கைது இடம்பெற்றுள்ளது.

இதன்போது இராமநாதபுரத்தைச் சேர்ந்த இரு இழுவைப்படகுகளும், புதுக்கோட்டையைச் சேர்ந்த ஒரு படகும் இலங்கைக் கடற்படையினரால் கைப்பற்றப்பட்டது.

கைதுசெய்யப்பட்ட இந்திய மீனவர்களையும் படகுகளையும் காங்கேசன்துறை கடற்படை முகாமுக்கு அழைத்து வந்து சட்ட நடவடிக்கைக்காக யாழ்ப்பாணம் நீரியல்வளத்துறை அதிகாரிகளிடம் ஒப்படைக்க கடற்படையினர் நடவடிக்கை எடுத்துள்ளனர். (ச-100)



# மோடிக்கு எதிராக களமிறங்குவீர்களா?



மம்தா பனர்ஜியிடம் கேட்டார் ரணில்

பா.ஜ.க.வுக்கு எதிரான அரசியலா?

கொழும்பு, செப். 15

இந்தியாவில் ஆளும் பாரதிய ஜனதாவுக்கு எதிராக 'இந்தியா' என்ற பெயரில் எதிர்க்கட்சிகள் இணைந்து 'மெகா கூட்டணியை' அமைத்துள்ள நிலையில், மோடிக்கு எதிரான பிரதமர் வேட்பாளராகக் களமிறங்குவீர்களாக? என்று திரினமுல் காங்கிரஸின் தலைவரும் மேற்கு வங்கத்தின் முதல்வருமான மம்தா பனர்ஜியிடம் வினவியுள்ளார் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க.

டுபாய் விமான நிலையத்தில் மம்தா பனர்ஜி மற்றும் ரணில் இருவரும் சந்தித்துப் பேச்சு நடத்தியுள்ளனர். இதன்போதே அவர் பனர்ஜியிடம் இவ்வாறு வினவியுள்ளார். இதற்கு 'மக்கள் விரும்பினால் நாங்கள் நாளையே அதிகாரத்தில் இருக்கலாம்' என்று பொதுப்பட ஒரு பதிலை வழங்கியுள்ளார் பனர்ஜி.

2024 ஆம் ஆண்டில் இந்திய நாடாளுமன்றத் தேர்தல் நடைபெற உள்ளது. இந்தத் தேர்தலில் பா.ஜ.கவை வீழ்த்தும் முனைப்பில் காங்கிரஸ், தி.மு.க, திரிணாமுல் காங்கிரஸ் உட்பட 26 கட்சிகள் இணைந்து இந்தியா' என்ற பெயரில் கூட்டணியை அமைத்துள்ளன. இந்தக் கூட்டணி சார்பில் 3 ஆலோசனைக் கூட்டம் நடந்து முடிந்துள்ளது. சமீபத்தில் மும்பையில் நடந்து முடிந்த 3 ஆவது ஆலோசனைக் கூட்டத்தில் கூட்டணியின் ஒருங்கிணைப்புக் குழு, பரப்புரைக் குழுக்கள் அமைக்கப்பட்டன. இருப்பினும் கூட்டணியின் பிரதமர் வேட்பாளர் யார்? கூட்டணியயின் தலைவர் யார்? என்பது பற்றிய முக்கியமான முடிவுகள் எடுக்கப்படவில்லை. பனர்ஜி உள்ளிட்ட பெரும் தலைகள் இந்தக் கூட்டணியில் உள்ளதால் மோடிக்கு எதிரான எதிர்க்கட்சி வேட்பாளர் யார்? என்பது தொடர்பில் பெரும் இழுபறியே நிலவுகின்றது. இந்த நிலையிலேயே ரணில் இவ்வாறு வினவியுள்ளார். (அ-ம)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழர்களின் அபிலாஷைகளை பூர்த்தி செய்யட்டும் இலங்கை!

## ஐ.நா.வில் இந்தியா வலியுறுத்து

கொழும்பு, செப். 15

**நீதி, சமத்துவம் மற்றும் சமாதானத்துக்கான தமிழ்மக்களின் அபிலாஷைகளைப் பூர்த்தி செய்வதற்கு இலங்கை அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டுமென ஐ.நா. மனித உரிமைகள் பேரவையில் இந்தியா வலியுறுத்தியுள்ளது.**

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் 54ஆவது கூட்டத்தொடர் கடந்த திங்கட்கிழமை ஜெனிவாவில் ஆரம்பமானது. இந்தியா சார்பில் பேரவையில் உரையாற்றிய மணி பாண்டேவால் சுட்டிக்காட்டப்பட்ட முக்கியமான விடயங்கள் வருமாறு:

இலங்கையின் அயல்நாடு மற்றும் நெருங்கிய நட்புநாடு என்ற ரீதியில் கடந்த 2009ஆம் ஆண்டு தொடக்கம் நிவாரணம், புனர்வாழ்வளித்தல், மீள்குடியேற் றம் மற்றும் மீளக்கட்டியெழுப்பல் ஆகியவற்றை முன்னிறுத்திய இலங்கையின் முயற்சிகளுக்கு இந்தியா தொடர்ச்சியான ஆதரவை வழங்கி வந்திருக்கின்றது.

நீதி, சமத்துவம், கௌரவம், சமாதானத்துக்கான தமிழ்மக்களின் அபிலாஷைகளுக்கு ஆதரவளித்தல் மற்றும் இலங்கையின் ஒருமைப்பாடு, இறையாண்மை ஆகியவையே அவையாகும்.

இவ்வாறானதொரு பின்னணியில் நீதி, சமத்துவம் மற்றும் சமாதானத்துக்கான தமிழ்மக்களின் அபிலாஷைகளை இலங்கை அரசாங்கம் பூர்த்தி செய்யும் என்றும், அரசமைப்பின் 13ஆவது திருத்தத்தை அமுல்படுத்தல் மற்றும் மாகாணசபைத் தேர்தல்களை நடத்துதல் ஆகிய கடப்பாடுகளை நிறைவேற்றும் என்றும் எதிர்பார்க்கின்றோம்.

தமது கடப்பாடுகளை நிறைவேற்றுவது குறித்து இலங்கை அரசாங்கம் வழங்கியிருக்கும் உத்தரவாதத்தைக் கவனத்திற்கொள்ளும் அதே வேளை, அடையப்பட்டுள்ள முன்னேற்றங்கள் போதுமானவையாக இல்லை.

ஆகவே அனைத்துப் பிரஜைகளினதும் அடிப்படை உரிமைகளும் மனித உரிமைகளும் பாதுகாக்கப்படுவதை உறுதிப்படுத்தும் வகையிலான தமது கடப்பாடுகளை உடனடியாக நிறைவே ற்றுவதற்கு அர்த்தபூர்வமான நடவடிக்கைகளை முன்னெடுக்குமாறு இலங்கை அரசாங்கத்தைக் கேட்டுக்கொள்கின்றோம் - என்றுள்ளது. (ம)

# முன்னிலை சோசலிசக் கட்சியை வேட்டையாடுவதற்கு முயற்சி!

அதன் தலைவர் தெரிவிப்பு

கொழும்பு, செப்.15

ஆயுதப் போராட்டத்துக்குத் தயாராகின்றனர் எனக்கூறி முன்னிலை சோசலிசக் கட்சியை வேட்டையாடுவதற்கான சூழ்ச்சி இடம்பெறுகின்றது என அந்தக் கட்சியின் தலைவரான குமார் குணரத்னம் தெரிவித்தார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

'அரகலய' (மக்கள் போராட்டம்) காலத்தில் மக்கள் சக்தி பற்றி அதிகம் பேசப்பட்டது. நாடாளுமன்றம் உட்பட மக்கள் பிரதிநிதித்துவ சபைகளுக்கு வெளியில் கட்டியெழுப்பப்பட வேண்டிய மக்கள் சக்தி தொடர்பாக கருத்தாடல் உருவானது. ஏனெனில் கடந்த 75 வருடகாலமாக மக்கள் பிரச்சினை, சமூகப் பிரச்சினை தீர்க்கப்படவில்லை. அனைத்து இன மக்களும் நல்லிணக்கத்துடன் வாழும் வேலைத்திட்டம் உருவாக்கப்படவில்லை.

மாறாக பொருளாதாரப் பிரச்சினை தலைதூக்கியது, இனப்பிரச்சினை மேலோங்கியது, அரச வளங்கள் விற்கப்பட்டன. தேர்தல் ஊடாக ஆட்சிகள் மாறின. ஆட்சிக்குவந்த அரசுகளால் பிரச்சினைகள் தீர்க்கப்படவில்லை. அதனால்தான் நாடாளுமன்றத்துக்கு வெளியில் மக்கள் சக்தியொன்று அவசியம் என முன்னிலை சோசலிசக் கட்சி வலியுறுத்தியது.

எம்மை வேட்டையாடும் நோக்கில் இந்தக் கூற்றைத் திரிவுபடுத்தி சூழ்ச்சியான முறையில் பரப்புரை முன்னெடுக்கப்பட்டது. அதாவது நாடாளுமன்றத்தை, தேர்தலைப் புறக்கணிக்கும் இவர்கள், தேர்தலைவிட அரகலயவை நம்புவது, ஆயுதப்போராட்டத்துக்காகவே என பரப்புரை முன்னெடுக்கப்பட்டது. முன்னிலை சோசலிசக் கட்சியை வேட்டையாடும் நோக்கிலேயே இப்படியான சூழ்ச்சித் திட்டம் முன்னெடுக்கப்படுகின்றது. உண்மை அதுவல்ல, நாம் தேர்தல்களை எதிர்கொள்வோம். மக்கள் சக்தி ஊடாக பலத்தைக் கட்டியெழுப்புவது பற்றிப் பேசுகின்றோம்- என்றார். (எ-44)



# கசூரினாவில் பாரம்பரிய இயற்கை உணவகம்

மூலிகையில் உணவு தயாரிக்கும் பாரம்பரிய இயற்கை உணவகம் கடந்த செவ்வாய்க்கிழமை பிரபல சித்த ஆயுள்வேத வைத்தியர் ஜெ.ஜெயலன் தலைமையில் கசூரினா கடற்கரையில் திறந்து வைக்கப்பட்டது. சபைச் செயலாளர் முதன்மை விருந்தினராகக் கலந்து கொண்டதோடு உணவகச் செயற்பாடு தொடர்பாக விரிவாகக் கேட்டறிந்து கொண்டார்.

இந்த உணவகம் சித்த ஆயள்வேத வைத்தியர் ஜெ.ஜெயலன் (சுஜிவா வைத்தியசாலை) முகாமையின் கீழ் இயங்கவுள்ளது.

அண்மைக்காலமாக பாரம்பரிய (இயற்கை) உணவு வகைகள் சுற்றுலாப் பயணிகளிடையே பெரும் வரவேற்பைப் பெறுவது குறிப்பிடத்தக்கது. (ஒ-ரி3-125)

# உதயன் ஊடக அனுசரணையில் இடம்பெறும் ஏ.ரி.எல். பிறீமியர் லீக் தொடரின் முடிவுகள்!

யாழ்ப்பாணம், செப். 15

உதயனின் ஊடக அனுசரணையில் ஏ.ரி.எல். பிறீமியர் லீக் கிரிக்கெட் தொடர் அச்செழு வளர்மதி விளையாட்டுக் கழக மைதானத்தில் கடந்த 9ஆம் திகதி ஆரம்பமானது. இந்தத் தொடரில் சில ஆட்டங்களின் முடிவுகள் வருமாறு.

ஞானமுருகன் மற்றும் கலைமகள் அணிகளுக்கு இடையிலான ஆட்டத்தில் ஞானமுருகன் அணி 15 ஓட்டங்களால் வெற்றிபெற்றது. முதலில் துடுப்பெடுத்தாடிய ஞானமுருகன் அணி 10 ஓவர்களில் 4 விக்கெட்டுகளை இழந்து 79 ஓட்டங்களைப் பெற்றது. அதிகபட்சமாக சயந்தன் 43 ஓட்டங்களைப் பெற்றார். பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய கலைமகள் அணி அனைத்து இலக்குகளையும் இழந்து 64 ஓட்டங்களை மட்டுமே பெற்றது.

ஸ்ரைக்கர்ஸ் மற்றும் பவர் ஹிட்டர்ஸ் அணிகள் மோதிய மற்றைய ஆட்டத்தில் பவர் ஹிட்டர்ஸ் அணி 65 ஓட்டங்களால் அபார வெற்றிபெற்றது. முதலில் துடுப்பெடுத்தாடிய பவர் ஹிட்டர்ஸ் அணி 10 ஓவர்களில் 3 விக்கெட்டுகளை இழந்து 152 ஓட்டங்களைப் பெற்றது. அதிகபட்சமாக டிலுஜன் 89 ஓட்டங்களைப் பெற்றார். பதிலுக்குக் களமிறங்கிய ஸ்ரைக்கர்ஸ் அணி 2 இலக்குகளை இழந்து 87 ஓட்டங்களை மட்டுமே பெற்றது.

றோயல்ஸ் மற்றும் ஞானமுருகன் அணிகளுக்கு இடையிலான மற்றொரு ஆட்டத்தில் றோயல்ஸ் அணி 23 ஓட்டங்களால் வெற்றிபெற்றது. முதலில் துடுப்பெ டுத்தாடிய றோயல்ஸ் அணி 6 விக்கெட்டுகளை இழந்து 87 ஓட்டங்களைப் பெற்றது. வினோ அதிகபட்சமாக 27 ஓட்டங்களைப் பெற்றார். பதிலுக்குக் களமிறங்கிய ஞானமுருகன் அணி 9 விக்கெட்களை இழந்து 64 ஓட்டங்களைப் பெற்றது. கீர்த்தனன் அதிகபட்சமாக 18 ஓட்டங்களைப் பெற்றார்.

பைங்கரன் மற்றும் கலைமகள் அணிகளுக்கு இடையிலான ஆட்டத்தில் பைங்கரன் அணி ஓர் ஓட்டத்தால் திரில் வெற்றிபெற்றது. முதலில் துடுப்பெடுத்தாடிய பைங்கரன் அணி 10 ஓவர்களில் 6 விக்கெட்டுகளை இழந்து 89 ஓட்டங்களைப் பெற்றது. பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய கலைமகள் அணி கடுமையான போராட்டத்தை வெளிப்படுத்தியது. எனினும் அந்த அணி 10 ஓவர்களில் 88 ஓட்டங்களை 7 விக்கெட்டுகளை இழந்து ஓர் ஓட்டத்தால் தோல்வியடைந்தது.

றோயல்ஸ் மற்றும் பவர் ஹிட்டர்ஸ் அணிகளுக்கு இடையிலான ஆட்டத்தில் றோயல்ஸ் 23 ஓட்டங்களால் வெற்றி பெற்றது. முதலில் துடுப்பெடுத்தாடிய றோயல்ஸ் அணி 7 விக்கெட்டுகளை இழந்து 86 ஓட்டங்களைப் பெற்றது. மதுசன் அதிகபட்சமாக 27 ஓட்டங்களைப் பெற்றார். பதிலுக்குக் களமிறங்கிய பவர் ஹிட்டர்ஸ் அணி நிர்ணயிக்கப்பட்ட 10 ஓவர்களில் 8 இலக்குகளை இழந்து 63 ஓட்டங்களைப் பெற்றது.

ஞானமுருகன் மற்றும் பைங்கரன் அணிகளுக்கு இடையிலான ஆட்டத்தில் ஞானமுருகன் அணி 53 ஓட்டங்களால் அபார வெற்றிபெற்றது. முதலில் துடுப்பெடுத்தாடிய ஞானமுருகன் அணி 4 விக்கெட்டுகளை இழந்து 117 ஓட்டங்களைப் பெற்றது. அதிகபட்சமாக கீதன் 40 ஓட்டங்களைப் பெற்றார். பதிலுக்குக் களமிறங்கிய பைங்கரன் அணி அனைத்து விக்கெட்டுகளையும் இழந்து 64 ஓட்டங்களையே பெற்றது. (ம-125)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### போர்க்குற்றவாளிகளை...

இது தொடர்பில் பேர்ள் அமைப்பு தெரிவித்ததாவது:

நீதிக்கான முயற்சிகள் இலங்கை அரசாங்கத்தினதும் மனித உரிமை பேரவையின் உறுப்பு நாடுகளினதும் விருப்பத்திலேயே தங்கியுள்ளன என மனித உரிமை ஆணையாளரின் அறிக்கை தெரிவித்துள்ளது.

எனினும் இலங்கையின் ஆட்சியாளர்கள் தங்கள் நடவடிக்கைகள் குறித்தும் பாதுகாப்புப் படையினர் குறித்தும் சுயாதீன விசாரணைகளை முன்னெடுக்க மறுத்துள்ளனர், தவறியுள்ளனர்.

இலங்கையின் ஆழமாக வேரூன்றிய சிங்கள-பௌத்த பெரும்பான்மை வாதம் இலங்கையின் அரசியல் நிலப்பரப்பின் பின்னணியில் முக்கியமான உந்துசக்தியாகச் செயற்படுகின்றது. இலங்கையில் உறுதியற்ற தன்மையையும் தண்டனையின்மையையும் தொடர்ந்தும் உருவாக்கி வருகின்றது, தமிழர்களைத் தொடர்ந்தும் ஒடுக்கி வருகின்றது.

இது காணி அபகரிப்பு துரிதமாக இடம்பெறுவதற்கும் வடக்கு-கிழக்கில் சிங்கள-பௌத்தமயமாக்கல் தொடர்ந்தும் இடம்பெறுவதற்கும் காரணமாக அமைந்துள்ளது.

ஐக்கிய நாடுகள் மனித உரிமை ஆணையாளர் அலுவலகத்தின் சமீபத்தைய அறிக்கையையும் அதன் முடிவுகள் மற்றும் பரிந்துரைகளையும் இலங்கை முற்றாக நிராகரித்துள்ளது. ஆதலால், இலங்கையின் குற்றவாளிகளைப் பொறுப்புக்கூறச் செய்வதற்கு சர்வதேச மயமாக்கப்பட்ட பொறிமுறைகளைப் பயன்படுத்துமாறு சர்வதேச சமூகத்திடம் தொடர்ந்தும் அழைப்பு விடுக்கிறோம். நீதியும், பொறுப்புக்கூறலும், தமிழ் மக்களுக்கான அரசியல் தீர்வும் இல்லாத பட்சத்தில் சிங்களப் பெரும்பான்மையினவாதம் தொடர்ந்தும் கட்டுப்படுத்தப்படாததாகக் காணப்படும். இனமோதலுக்கான அடிப்படைக் காரணங்களுக்குத் தீர்வு காணப்படாத நிலை நீடிக்கும் உறுதியற்ற சூழல் காணப்படும் - என்றுள்ளது. (அ-ம)

### சுற்றுலா நாடாக....

யலிலேயே இலங்கை இவ்வாறு இடம் பிடித்துள்ளது.

2023 ஆம் ஆண்டு சுற்றுலாப் பயணிகளுக்கான வாய்ப்புகளை கருத்திற் கொண்டு இந்தப் பட்டியல் வெளியிடப்பட்டுள்ளது. இதன்படி, 2023 ஆம் ஆண்டில் பார்வையிட வேண்டிய உலகின் சிறந்த 50 தீவுகளின் பட்டியலில் இலங்கையும் இணைக்கப்பட்டுள்ளது. இந்தப் பட்டியலில் இலங்கை 13ஆவது இடத்தைப் பெற்றுள்ளதுடன், ஸ்பெய்ன், மலேசியா, மாலைதீவு, பாலி, இந்தோனேஷியா, சீஷெல்ஸ் ஆகிய நாடுகளை விட இலங்கை முன்னிலையில் தரப்படுத்தப்பட்டுள்ளமை சிறப்பம்சமாகும். (அ-ம)

### நாணய....

ஜனாதிபதி அலுவலகத்தில் இடம்பெற்றது.

நேற்று முதல் இரு வார காலத்துக்கு இந்தக் கலந்துரையாடல் நடைபெறவுள்ள நிலையில் அதன் இறுதி அமர்வு செப்ரெம்பர் 26ஆம் திகதி ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் தலைமையில் நடைபெறும். நேற்று இடம்பெற்ற சந்திப்பில் இலங்கை அரசைப் பிரதிநிதித்துவப்படுத்தும் வகையில் நிதி இராஜாங்க அமைச்சர் செஹான் சேமசிங்க, தேசிய பாதுகாப்பு தொடர்பான ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகரும் ஜனாதிபதி பணிக்குழாம் பிரதானியுமான சாகல ரத்நாயக்க, ஜனாதிபதியின் செயலாளர் சமன் ஏக்கநாயக்க, பொருளாதார அலுவல்கள் தொடர்பிலான ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகர் ஆர்.எச்.எஸ்.சமரதுங்க, நிதி அமைச்சின் செயலாளர் மஹிந்த சிறிவர்த்தன, மத்திய வங்கி ஆளுநர் கலாநிதி நந்தலால் வீரசிங்க ஆகியோரும் கலந்துகொண்டிருந்தனர். (அ-ம-44)

### கனடா....

தலைமையிலான குழுவினரால் கைது செய்யப்பட்டுள்ளார். காத்தான்குடியைச் சேர்ந்த அந்த நபர், சமூக வலைத்தளம் ஊடாக விளம்பரப்படுத்தல்களை மேற்கொண்டு பெண்ணொருவரிடம் இந்த மோசடியைச் செய்துள்ளார். இதையடுத்து அந்தப் பெண் கொடிகாமம் பொலிஸார் ஊடாக யாழ்ப்பாணம் விசேட குற்றவிசாரணைப் பிரிவு பொலிஸாரிடம் முறையிட்டார். அதனைத் தொடர்ந்து, யாழ்ப்பாணம் விசேட குற்றவிசாரணைப்பிரிவு பொலிஸாரால் மேற்கொண்ட நடவடிக்கைகளை அடுத்தே சந்தேகநபர் கைதுசெய்யப்பட்டுள்ளார். சந்தேகநபர் 57 வயதுடையவர். அவர் நேற்று நீதிமன்றத்தில் முற்படுத்தப்பட்ட தையடுத்து, அவரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிமன்றம் உத்தரவிட்டது. (அ-ம-26)

### தியாகதீபம்...

விடம் ஐந்து அம்சக் கோரிக்கைகளை முன்வைத்து உணவும் இல்லாமல், ஒரு துளி தண்ணீர்கூட அருந்தாமல் தனது அஹிம்சைப் போராட்டத்தை ஆரம்பித்தார் திலீபன்.

மீளக்குடியமர்தல் என்ற பெயரில் இலங்கைத்தீவின் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் புதிதாக திட்டமிடப்படும் குடியேற்றங்களைத் தடுத்து நிறுத்தவேண்டும், சிறைக்கூடங்களிலும், இராணுவ பொலிஸ் தடுப்பு முகாம்களிலும் தடுத்துவைக்கப்பட்டுள்ள தமிழ் அரசியற்கைதிகள் யாவரும் விடுதலை செய்யப்படவேண்டும், அவசரகாலச் சட்டம் முழுமையாக நீக்கப்பட வேண்டும்,

ஊர்காவல் படையினருக்கு வழங்கப்பட்ட ஆயுதங்கள் முற்றாகக் களையப்படவேண்டும், தமிழர் பிரதேசங்களில் புதிதாக பொலிஸ் நிலையங்களைத் திறப்பதற்கு மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் முற்றாக நிறுத்தப்பட வேண்டும் என்பனவே திலீபன் முன்வைத்த ஐந்து அம்சக் கோரிக்கைகளாக அமைந்திருந்தன. அவற்றை பாரத தேசம் செவிசாய்க்காத நிலையில் செப்ரெம்பர் மாதம் 26ஆம் திகதி திலீபனின் உயிர் இவ்வுலகை விட்டுப் பிரிந்தது.

இந்த நிலையில் திலீபனின் 36ஆவது நினைவேந்தல் ஆரம்ப நிகழ்வுகள் தமிழர் தாயகத்தின் பல பகுதிகளிலும் இன்று இடம்பெறவுள்ளன. யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் அஞ்சலிப்பு நிகழ்வுகள் இடம்பெறவுள்ளதுடன், தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் ஊர்திப் பவனியொன்றும் பொத்துவில் முதல் நல்லூர் வரையில் முன்னெடுக்கப்படவுள்ளது. (அ-ம-66)

### பேர்த்தியைக்...

யாழ்ப்பாணம் பரமேஸ்வரா சந்திப்பகுதியில் உள்ள விடுதியொன்றின் அறையில் இருந்து கடந்த செவ்வாய்க்கிழமை 12 வயதுச் சிறுமியொருவர் சடலமாக மீட்கப்பட்டார். அதே அறையில் இருந்து பெண்ணொருவர் சுயநினைவிழந்த நிலையில் மீட்கப்பட்டார். அவர்கள் பேர்த்தி-பாட்டி முறையானவர்கள். உயிருடன் மீட்கப்பட்ட பாட்டி உடல் நலம் தேறிய நிலையில் அவரிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளின் அடிப்படையில் பாட்டியே சிறுமிக்கு ஊசிமூலம் ஆபத்தான மருந்துகளை ஏற்றிக்கொலை செய்தார் என்பது தெரியவந்தது. இதையடுத்து பாட்டி நேற்று நீதிமன்றத்தில் முற்படுத்தப்பட்டதையடுத்து அவரை 27ஆம்திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. (அ-ம-26)

### கட்டுப்படுத்துகிறது...

சட்டத்தரணிகள் கூட்டிணைவின் சார்பில் நேற்று வெளியிடப்பட்டுள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

'நீதிமன்றத்தில் நிலுவையிலுள்ள குறிப்பிட்ட சில வழக்குகளுடன் தொடர்புடைய நீதிபதிகள் மற்றும் நீதிமன்ற செயற்பாடுகளை அண்மையில் சில நாடாளுமன்ற உறுப்பினர்கள் மேற்கோள் காண்பித்த சம்பவங்கள் குறித்து நாம் மிகுந்த அவதானத்துடன் உள்ளோம்.

குறிப்பாக கடந்த 8ஆம் திகதி தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சர் மனுஷ நாணயக்காரவால் ஹொரணை நீதிமன்ற அதிகாரி தொடர்பில் நாடாளுமன்றத்தில் வெளியிடப்பட்ட கருத்து, கடந்த மாதம் 22ஆம் திகதி பாராளுமன்ற உறுப்பினர் சரத் வீரசேகரவால் முல்லைத்தீவு நீதிவான் தொடர்பில் வெளியிடப்பட்ட கருத்து மற்றும் நீதிபதியொருவரின் பெயரைக் குறிப்பிட்டு நாடாளுமன்ற உறுப்பினர் இரா.சாணக்கியன் வெளியிட்ட கருத்து என்பன தொடர்பில் நாம் ஆழ்ந்த கரிசனை கொண்டுள்ளோம்.

இச்சம்பவங்கள் தமது கடமையை சுதந்திரமானதும், சுயாதீனமானதுமான முறையில் முன்னெடுப்பதற்கு நீதிமன்றக்கட்டமைப்பு கொண்டிருக்கும் இயலுமையைத் திட்டமிட்டவகையில் கட்டுப்படுத்தும் போக்கு மேலோங்கிவருவதையே புலப்படுத்துகின்றன. இவ்வாறானதொரு பின்னணியில் சட்டத்தின் ஆட்சியைப் பாதுகாப்பதற்கு அவசியமான நீதிக்கட்டமைப்பின் சுதந்திரத்தை வலுப்படுத்துவதற்குரிய அனைத்துத் தலையீடுகளையும் சம்பந்தப்பட்ட தரப்பினர் உடனடியாக மேற்கொள்ளவேண்டும் என்று சட்டத்தரணிகள் கூட்டிணைவு வலியுறுத்துகின்றது. (அ-ம)

### பிடியாணை....

காயமடைந்தார். சம்பவ இடத்தில் பிடியாணை பிறப்பிக்கப்பட்டு நீதிமன்றத்தால் தேடப்படும் சந்தேகநபருடன் பொலிஸ் புலனாய்வுப் பிரிவைச் சேர்ந்த அதிகாரியொருவர் உடனிருந்தமை சர்ச்சையாகியுள்ளது.

கார் ஒன்றில் வந்தவர்களே தாக்குதல் நடத்திவிட்டுத் தப்பிச் சென்றுள்ளனர். வாள்வெட்டில் காயமடைந்தவர் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார். அவர் பல்வேறு வழக்குகளில் பிடியாணை பிறப்பிக்கப்பட்டு நீதிமன்றத்தால் தேடப்பட்டு வருகின்றார். காயமடைந்தவரிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளில் பொலிஸ் புலனாய்வுப் பிரிவைச் சேர்ந்த அதிகாரியும் சம்பவ இடத்தில் இருந்துள்ளமை தெரியவந்துள்ளது. பல்வேறு குற்றங்களுக்காக வழக்குகளுக்காக நீதிமன்றத்தால் பிடியாணை பிறப்பிக்கப்பட்டு தேடப்படும் நபரொருவருடன் பொலிஸ் அதிகாரியொருவர் உடனிருந்தமை சர்ச்சையாகியுள்ள நிலையில் இது தொடர்பிலும் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. (அ-ம-26)

### காட்டுக்குள்....

வடிக்கைகள் நேற்றுத் தீவிரப்படுத்தப்பட்டன. புதுஐயன்குளப் பகுதியில் கசிப்புக் காய்ச்சப்படுவதாக பொலிஸாருக்குக் கிடைத்த தகவல்களுக்கு அமைய நேற்றுக் காலை அந்தப் பகுதிக்குச் சென்ற பொலிஸ் அலுவலரே காணாமல் போயுள்ளார்.

மூன்று பொலிஸ் அலுவலர்கள் சம்பவ இடத்துக்குச் சென்றபோது அங்கு சிலர் கசிப்புக் காய்ச்சிக் கொண்டிருந்துள்ளனர். அவர்களை மடக்கிப் பிடிக்க முயன்றபோது சந்தேகநபர்கள் தப்பியோடியுள்ளனர். இதையடுத்து நீண்டதூரம் அவர்களை பொலிஸார் விரட்டிச் சென்றபின்னர் திட்டமிடப்பட்ட இடத்தில் மீண்டும் இருவரே வந்து சேர்ந்துள்ளனர். ஒருவர் திரும்பி வரவில்லை. இதையடுத்தே பொலிஸாருக்கும் இராணுவத்தினருக்கும் அறிவிக்கப்பட்டு தேடுதல் இடம்பெற்று வருகின்றது. காடுகள், குளங்கள் உள்ளிட்ட பகுதிகளில் மோப்பநாயின் உதவியுடன் நேற்று இரவுவரை தேடுதல் இடம்பெற்றது. (அ-ம-26,113)

### நல்லூரில்...

வழிபாடுகள் இடம்பெற்றதைத் தொடர்ந்து நாதஸ்வர தவில் முழக்கங்களுடன் வேற்பெருமான், வள்ளி, தெய்வயானை நாயகியர் மற்றும் சண்டேஸ்வரப் பெருமான் ஆகிய மும்மூர்த்திகளும் வெண் பட்டாடைகள், வெண் மலர்மாலைகள் முதலான அலங்காரங்களுடன் கொடித் தம்பத்தடியைச் சென்றடைந்தனர்.

கொடியிறக்க உற்சவத்துக்கான பூர்வாங்கக் கிரியைகள் இடம்பெற்றதைத் தொடர்ந்து கொடித்தம்பத்தடியைச் சூழ நின்று சிவாச்சாரியார்கள் மந்திர உச்சாடனம் மேற்கொண்டனர். நாதஸ்வரம், தவில் முதலிய மங்கல வாத்தியங்கள் முழங்க நேற்று மாலை 5.30 மணியளவில் நல்லைக் கந்தனின் கொடியிறக்கம் நடந்தேறியது.

முன்னதாக நேற்றுக்காலை தீர்த்தத் திருவிழா இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது. (அ-ம-66)

## நல்லூர் கோயிலில்
# மாடு முட்டி ஒருவர் பலி

யாழ்ப்பாணம், செப். 15

யாழ்ப்பாணம் நல்லூர் கந்தசுவாமி கோயில் ஆலயத்தின் நந்தவனப் பகுதியில் பணியாற்றுமொருவர் காளை மாடு முட்டி உயிரிழந்துள்ளார். நேற்று மாலை இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது. இருபாலையைச்சேர்ந்த நித்தியசிங்கம் என்ற (வயது - 60) என்பவரே உயிரிழந்தவராவார். காளை மாட்டுக்கு உணவுவைக்க சென்றவேளை மாடு முட்டியதில் காய முற்றவர் வீழ்ந்து கிடந்த நிலையில், மருத்துவமனைக்குக் கொண்டு செல்லும் வழியில் உயிரிழந்துள்ளார். சடலம் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் வைக்கப்பட்டுள்ளது. (ம-26)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# வல்லிபுர ஆழ்வாருக்கு கொடியேற்றம் நேற்று

யாழ்ப்பாணம், செப். 15

வரலாற்றுச் சிறப்புமிக்க வடமராட்சி வல்லிபுர ஆழ்வார் திருக்கோயில் வருடாந்த மஹோற் சவம் நேற்று வியாழக்கிழமை கொடியேற்றத் துடன் சிறப்புற ஆரம்பமாகியுள்ளது.

தொடர்ந்து 16 நாள்கள் இடம்பெறவுள்ள உற்சவத்தில் எதிர்வரும் 22 ஆம் திகதி வெள்ளிக்கிழமை வெண்ணெய்த் திருவிழா, மறுநாள் சனிக்கிழமை துகில் திருவிழாம், மறுநாள் ஞாயிற்றுக்கிழமை பாம்புத் திருவிழா, 25 ஆம் திகதி திங்கட்கிழமை கம்சன் போர் திருவிழா , மறுநாள் செவ்வாய்க்கிழமை வேட்டைத் திருவிழா, 27ஆம் திகதி சப்பறத் திருவிழா, 28ஆம் திகதி வியாழக்கிழமை தேர்த்திருவிழா, 29ஆம் திகதி வெள்ளிக்கிழமை சமுத்திரத் தீர்த்தத் திருவிழா, 30ஆம் திகதி சனிக்கிழமை கேணித்தீர்த்தம் என்பன இடம்பெற்று அன்று மாலை கொடியிறக்கத்துடன் திருவிழா நிறைவடையவுள்ளது.

ஆலயப் பிரதம குரு கணபதீஸ்வரக் குருக்கள் தலைமையில் திருவிழாக்கள் இடம்பெறவுள்ளன.

அடியார்களுக்கான பாதுகாப்பு ஏற்பாடுகள் பருத்தித்துறை பொலிஸ் பதில் பொறுப்பதிகாரி பொலிஸ் பரிசோதகர் சேந்தன் தலைமையில் முன்னெடுக்கப்பட்டுள்ளது. வடமராட்சி வடக்கு பிரதேச செயலகமும் தனது கடமைகளை ஆரம்பித்துத்துள்ளது. (ச-27)



# மாபெரும் நடனப் போட்டி

கைதடி, செப். 15

கைதடி குமரநகர் சனசமூக நிலையத்தின் 67 வது ஆண்டை முன்னிட்டு மாபெரும் நடனப் போட்டி நடைபெறவுள்ளது.

பரதநாட்டியம் (தனி), டிஸ்கோ டான்ஸ் (தனி), டிஸ்கோ டான்ஸ் (குழு) போன்ற பிரிவுகளில் குறித்த நடனப்போட்டி இடம் பெறும்.

எந்தப்பிரதேசத்திலிருந்தும் 10 வயதுக்கு மேற்பட்ட போட்டியாளர்கள் பங்கேற்க முடியும் என ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர்.

எதிர்வரும் 19 ஆம் திகதிக்கு முன்னர் பதிவுகளை மேற்கொள்ள வேண்டும்.

ஒவ்வொருபிரிவில் இருந்தும் தெரிவு செய்யப்பட்ட 5 போட்டியாளர்கள் இறுதி நிகழ்வில் பங்குபற்ற முடியும்.

அதில் முதல் மூன்று இடத்தைப் பெறும் போட்டியாளர்கள் பரிசில்கள் வழங்கிக் கௌரவிக்கப்படவுள்ளனர் என ஏற்பாட்டாளர்கள் மேலும் அறிவித்துள்ளனர்.

(ஒ-ரி3-125)


## பணிப்பெண் தேவை

யாழ். கொக்குவில் பகுதியில் இரு வயதானவர்கள் உள்ள வீட்டிற்கு வீட்டு வேலைகள் செய்வதற்கு பணிப்பெண் ஒருவர் தேவை. சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.

076 396 2454

## விற்பனைக்கு

HONDA C - 70 வகையைச் சேர்ந்த (Japan) மோட்டார் சைக்கிள் விற்பனைக்குண்டு.

9/6 புது வீதி, கொய்யாத்தோட்டம்

077 413 7246

(cs 52093) (N.1)

## கொழும்பு விலையில்

யாழ்ப்பாணத்தில் கோழி மலிவு விற்பனை

*1 Kg சுத்தம் செய்யப்பட்ட புறொயிலர் இறைச்சி விலை 1250/-

*1 Kg பேரன்ஸ் சுத்தம் செய்யப்பட்ட இறைச்சி விலை 1250/-

*கல்பேட் சுத்தம் செய்யப்பட்ட இறைச்சி விலை 1 Kg 1250/-

*விறாத்து கோழிக்குஞ்சுகள், சேவல், ஊர்கோழி

இவை அனைத்தும் வியாபாரிகளுக்கு, ஹோட்டல் தேவைபடுபவர்களுக்கு் விசேட விலை கழிவு உண்டு.

தொடர்பு: நியு சிற்றி பாம்

நியு சிற்றி கோழிக்கடை

இல.08, சின்னக்கடை மார்க்கெட், குருநகர். யாழ்ப்பாணம்.

(CS 26214)A-1

## வேலைவாய்ப்பு

வவுனியாவில் இயங்கும் Courier சேவை நிறவனத்திற்கு Branch Executive தேவை.

வயது 18 - 35 வரை நேர்முக பரீட்சை 16.09.2023 வவுனியாவில் இடம்பெறும்.

076 690 8967

(cs 52098) (N-1)


# 6ஆம் மாத நினைவலைகள்



முன்னாள் தமிழர் விடுதலைக் கூட்டணியின் யாழ். மாவட்ட செயலாளர் நாயகமும் அனைத்துலக எம்.ஜி.ஆர் பேரவைத் தலைவரும் சமாதான நீதவானும் திருமுருகன் களஞ்சிய உரிமையாளரும் முன்னாள் வடபிராந்திய மினிபஸ் சங்கத் தலைவருமாகிய

அமரர் உயர்திரு.

**பொன்னுத்துரை மதிமுகராஜா**

அவர்களின் பாசமிகு மனைவி

அமரர் திருமதி

## பொன்.மதிமுகராஜா விஜயலட்சுமி

தோற்றம் 15.12.1948 — மறைவு 15.03.2023

அம்மா அம்மா என்று கதறுகின்றோம்
உங்கள் செவிதனில் கேட்கவில்லையா
பாவிகளாய் இருந்து பரிதவிக்கின்றோம்
ஒரு கூண்டில் வாழ்ந்த எம்மை விட்டு
எங்கு தான் சென்றீர்களோ
காலன் உங்களை அழைத்து விட்டான்
கணக்கை முடித்துவிட்டான்
உங்கள் ஆத்மா சாந்தியடைய
ஈழமண்ணிலிருந்து வணங்குகின்றோம்.

"தாயிற்சிறந்த கோவிலுமில்லை
தந்தை சொல்மிக்க மந்திரமில்லை"

"ஸ்ரீமுருகபவனம்"
தாவடி வடக்கு, கொக்குவில்.

பொன். மதிமுகராஜா
விஜயகாந்த்
077 620 2077
காலி வீதி, வெள்ளவத்தை, கொழும்பு - 06
077 775 0312

(cs 24450) (N



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் [illegible] இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 15.09.2023 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.